விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆடி 6 ஜுலை 2 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (21—7—85) இதழ் 161

## மத்திய கிழக்கு செல்லும் பெண்களுக்கு அறிவுரை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் வேலைக்கெனச் செல்லும் பெண்களுக்கு அறிவுரைகள் வழங்கும் புத்தகங்கள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வழங்கப்படுகின்றன.

மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கும் இந்தப் புத்தகங்களை விநியோகிப்பதற்கென விமான நிலையத்தில் தனிப்பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

# வன்முறை யுத்தமின்றி இனப் பிரச்சனைத் தீர்வு!

## யாழ். நகரில் அதிர்ச்சி தந்த குண்டுச்சத்தம்!

[யாழ்ப்பாணம்]

நேற்று முன் தினம் இரவு யாழ் நகரில் 6 குண்டுகள் வெடித்தன. இக்குண்டுவெடிப்புச் சத்தம் நகரைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது.

யாழ். சுப்பிரமணியம் பூங்காப் பக்கமாக இக்குண்டுகள் வெடித்த சத்தங்கள் கேட்டன. [மா]

## ஐ. தே. க. இளைஞர் மத்தியில் ஜனாதிபதி

## 'திருமலையில் சர்வதேச விமான நிலையம்'

(கொழும்பு)

யுத்தமோ அல்லது வன்முறையோ இல்லாமல் இலங்கை இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி இளைஞர் அமைப்பின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தால்ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், வருங்காலத்தில் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம்

(15-ம் பக்கம் பார்க்க)

## நேற்று நகரில் வெளியான அஞ்சலிப் பிரசுரங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமது இயக்கத் தோழர் தயா நித்தியநாதன்) என்பவருக்கு அஞ்சலி செலுத்தி நேற்றுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

'90வது நாள் நினைவஞ்சலி' என்ற தலைப்பில் கவிதை நடையில்

(15-ம் பக்கம் பார்க்க)

## இத்தாலியில் சம்பவம்:

## 3 ஹோட்டல்கள் பல வீடுகள் நீரடித்துச் சென்றது! 275 பேர் உயிரிழப்பு!

[றோம்]

வட இத்தாலியிலுள்ள நீர்த்தேக்க அணையொன்று உடைப்பெடுத்ததால் சுமார் 275 பேர் இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அணை உடைப்பெடுத்த பொழுது நீர்த்தேக்கத்திலுள்ள நீர் பள்ளத்தாக்கு வழியாகப் பாய்ந்து பலவீடுகளையும் மூன்று ஹோட்டல்களையும் அடித்துச் சென்றதாகவும் இதில் அகப்பட்டவர்களில் அநேகமானவர்கள் இறந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது

இதுவரை 80 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## கட்டுநாயக்காவில்

## இந்தியா செல்வோருக்கு தனி 'கியூ', தனி வாசல்

(கொழும்பு)

இந்தியா செல்வோருக்குக் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தனிக் 'கியூ' வரிசையும், தனிவாசலும ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

ஏனைய நாடுகளுக்குச் செல்வோர் ஒரே வாசல் வழியாகச் செல்லக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நேற்று இந்தியா பயணமாவதற்கு அதிகமான பயணிகள் விமான நிலையத்தில் இந்தத் தனி கியூ வரிசையில் நின்றதை அவதானிக்க முடிந்தது

## இனப்பிரச்சனைத் தீர்வுக்கு

# நியாயமான உணர்வுகளை அரசு அங்கீகரிக்க வேண்டும்

## ஈழதேசிய விடுதலை முன்னணி அறிக்கை

(சென்னை)

''இலங்கைத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இலங்கை அரசு அங்கீகரிக்காவிட்டால் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காண முடியாது'' என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி நேற்றுச் சென்னையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய நான்கு இயக்கங்கள் அடங்கிய இந்த முன்னணியின் அறிக்கையில் இலங்கைத்தமிழர்களின் நியாயமான உணர்வுகளைக் கருத்தில் கொண்டு புதிய யோசனைகளை இலங்கை அரசு தெரிவிக்கவேண்டும் என்றும், திம்பு மாநாட்டில் நடை

(15-ம் பக்கம் பார்க்க

## மாதகல் பண்டத்தரிப்பு மக்கள் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சனை சம்பந்தமாக இலங்கை அரசுக்கும் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும் இடையே பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தையைக் கண்டித்து மாதகல் - பண்டத்தரிப்புப் பகுதிகளிலுள்ள பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று ஊர்வலம் நடாத்தினர்கள்.

ஆண்கள் — பெண்கள் இளைஞர்கள்-யுவதிகள்- வயோதிபர்கள்-சிறுவர்கள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்

நேற்றுக்காலை 9-30 மணியளவில் இவ்வூர்வலம் ஆரம்பமாகி பண்டத்தரிப்பு சித்தன்கேணி ஊடாகச் சென்று பிற்பகல் 3-30க்கு முடிவடைந்தது.

' மாகாண சுயாட்சி வேண்டாம் - மாவட்ட சபை வேண்டாம்-மாநில சுயாட்சி வேண்டாம்-தமிழ்ஈழம் வேண்டும்'' என்பன போன்ற சுலோகங்களை ஊர்வலத்தினர் கோஷித்தனர். (மா)

## தமிழ்த் தீவிரவாதிகளுக்காக

## இலங்கை ஊடாக சர்வதேச தங்கக் கடத்தலாம்

[கொழும்பு]

இலங்கைக்கு ஊடாக சர்வதேசரீதியில் தங்கக் கடத்தல் இடம்பெறுவதை பொலிஸ் புலன் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளதாக 'லங்கா புவத்' செய்தி ஏஜென்ஸி தெரிவித்துள்ளது

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றவெளிநாட்டு

(15-ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொன் கிறீற் மிக்ஸர் விற்பனைக் குண்டு. தொடர்பு: குயின்ஸ், பண்டத்தரிப்பு. 4526

8 ஸ்ரீ 7635 போட் கோற்றீனுக் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: விஜயகுமார், நடராஜா கோட்டம், ஊரிக்காடு வல்வெட்டித்துறை. 4549

தண்ணீர், மின்சார வசதிகளுடன் ஒரு சிறிய வீடு வாடகைக்கு உண்டு பெஞ்சமின் மரியதாஸ், 732, ஆஸ்பத்திரி வீதி (உபதபாலகத்திற்கு முன்பாக), யாழ்ப்பாணம். 4567

அளவெட்டி தெற்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் வீதியில் 2 பரப்புக்காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: விளம்பர இல. 4492, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4492

மரம் அரியும் யந்திரங்களும் தச்சுவேலை செய்யும் யந்திரங்களும் விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: ஜப்னா எலக்றிக்கல்ஸ். ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம், ச. நாகராசா, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 4524

கொழும்புத்துறையில் தயாநிகந்தோா பாடசாலைக்குக் கிட்டவும் கோயில் முன்பாகவும், கச்சேரி, சென். ஜோன்ஸ், சுண்டிக்குளி அண்மையாகவும் வீடுகட்ட, உகந்த 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: திருமதி முத்தையா, C/o பரம் தில்லைராசா, பொற்பதி வீதி கிழக்கு, கொக்குவில். 4531

உடுவில் முருகமூர்த்தி கோயிலுக்கு அண்மையில் 7 பரப்புக் காணி கிணற்றுடன் மலிவு விலையில் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: திருமதி ஐ சுப்பிரமணியஐயர், உப்புமடம், கே கே. எஸ். வீதி. கோண்டாவில். 4532

கொக்குவில் இந்துக்கல்லூரி சந்தியில் கல்லூரிக்கு முன்பாக ஸ்ரேசன் வீதயில் ஒன்றரை (1½) பரப்புக்காணி கிணறு, மலசலகூட வசதியுடன் விற்பனைக் குண்டு. 207, மின்சார நிலைய வீதியிலுள்ள 'ஷப்ரூ' நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும். 4543

எம்மிடம் இறைச்சிக்குத் தேவையான கடா ஆடுகளும், வளர்ப்புக்குத் தேவையான நல்ல இன ஆடுகளும் விற்பனைக்குண்டு தொடர்பு: ரஞ்சித் (கதிரைகள் வாடகைக்குக் கொடுக்கும் அருகாமையில்) 16, மார்ட்டின் லேன், யாழ்ப்பாணம். 4568

எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 8½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (4+4½ 5+3½ 5½+3) துண்டுகளாகவும் பகிர்ந்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: விளம்பர இல: 4541 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4541

## விற்பனைக்கு

3 ஸ்ரீ 9693 இலக்க வொக்ஸ் வெகன் கார் உடன் விற்பனைக் குண்டு தொடர்பு: கே. இரத்தினசபாபதி 140, திருநெல்வேலி யாழ்ப்பாணம் அல்லது க அரியநாயகம், சட்டத்தரணி. 4508

சில்லறைக் கடைகளுக்குரிய விருஃகி ஷோக்கேஸ் (Show-Case) மண்ணெண்ணை Stand வேறு பொருட்களும் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 23, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 4563

புலோலி மேற்கு சாளம்பை உபதபால் கந்தோருக்கு எதிரில் சாத்திலிங்கவத்தை காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக் குண்டு. சுத்தமான ஒப்பனை நல்ல குடியிருப்புப் பிரதேசம். தரகர் தேவையில்லை. கணபதிப்பிள்ளை கனகசபை, வராஒல்லை, நெல்லண்டை வீதி, தும்பளை, பருத்தித்துறை. 4565

சாப்பாட்டுக்கடை, வகுப்புகள் நடத்த உகந்த புதிய தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ரவி அன் ராஜ் 77, பெரியகடை, யாழ்ப்பாணம். 4570

நல்லஇன வளர்ப்பு மீன்கள் மலிவான விலையில் 23ம் திகதி முதல் விற்பனைக்குண்டு ''இரத்தினவாசா'' கருவேலடி ஒழுங்கை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மேற்பமாக] கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 4571

அழுத்தமான அம்மி, ஆட்டுக்கல், கல் உரல், திருகை, ஹோட்டலுக்குத்தேவையான பெரிய அளவிலான ஆட்டுக் கல் அனைத்தும் சருங்கல்லில் கைதேர்ந்த தொழில் நுட்பக் கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்துஅளிப்போர்: சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமிகோவில் வீதி, வவனியா. சாவகச்சேரியில்: சுல்தான் அப்துல்காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 4059

மானிப்பாய் தெற்கு ஆனைக் கோட்டை சம்பந்தப்பிள்ளையார் கோவிலுக்கண்மையில் நல்ல சூழலில், வடக்கு வாசல் மூன்று அறை (3) கட்டக்கூடிய பத்திருப்பு வரை கட்டப்பட்டதும், கிணறு சரி அரைவாசி பங்குடனும், சற்சதுரமான இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. இ பாலசுப்பிரமணியம், மானிப்பாய் தெற்கு. 4586

பலாலி றோட், வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள 1 1/2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ம. குமரேசன், தையலன்கடவை, குப்பிளான். 4581

## விற்பனைக்கு

டச் றோட்டில் ஆஸ்பத்திரி, சந்தை, பாடசாலைக்கு அருகாமையில் இரண்டு அறைகள் கொண்ட வீட்டுடன் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு மு அப்துல் ரஹீம், நியுமூத்து மார்க்கட். சாவகச்சேரி. அல்லது முகிடீன் மக்கின்ஸ், 165, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். 4583

## தேவை

கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், திருத்துவதில் கைதேர்ந்த ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளப்படும். 20-07-85 தொடக்கம் 25-07-85 இடையில் தொடர்பு கொள்ளவும். தேவன் வோச் வேக்ஸ், 64, பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். 4561

சுத்தமாகக் காயவைத்த எலுமிச்சம் கோது மொத்தமாகத் தேவை M G M. Stores, 777 K K S Road, Jaffna. T' Phone: 22611 (4438)

## வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் செல்வதற்குச் வசதியாக வட்டுக்கோட்டை, அராலி, சித்தங்கேணி சங்கரத்தை ஏதாவதொரு இடத்தில் வாடகைக்குத் தேவை தொடர்பு கொள்ளவும்: S M. Kandasamy Gordon Estate, Udapussellawa. 4514

## பயிற்சி

சுருக்கெழுத்து, தட்டெழுத்து தேவைகளுக்கும், ஆங்கிலம் அடிப்படையிலிருந்து பேசவும் வீட்டில் வந்து 10 மைலுக்குள் சொல்லித்தரப்படும். எஸ். விஜயானந்தன் கல்வளை, சண்டிலிப்பாய். 4569

## வைத்தியம்

மனநோய், காக்கைவலி, கான்சர், கழலை, கட்டிகள், சரிமரோகங்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் M V. தில்லைசந்ரன், (Govt. Regd Homoeopath) 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், 4364

## குத்தகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய பேக்கறி குத்தகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திருமதி த. அரியரத்தினம், இல. 81, ஸ்டேசன்றோட், சுன்னாகம். 4490

## WANTED

Wanted 2 or 3 Roomed House or Annex with lights, water service, attached bath room, within Municipal limits or near about Chundikuli. Reply to R A Vairamuthu, No 6, Mount Carmel Road, Jaffna. 4580

## மணப்பந்தல்

இந்து வேளாள பெற்றோர் தமது மகள் - 23 வயது B Sc (Civil Engineering) Graduate க்கு தொழில் தகைமையுடைய மணமகன் ஒருவரை விரும்புகிறார்கள். சாதகம் மற்றும் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 4551 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4551


யாழ். இந்து உயர் வேளாள குலத்தைச்சேர்ந்த 34 வயதுடைய பட்டதாரி ஆசிரியையாக தொழில் புரியும் (மச்சம், மாமிசம் உண்ணாத) மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. சீதனம் வசதிக்கேற்ப வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 4534 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4534

65 வயது ஆரோக்கியமுள்ள விவாகமாகாத கிறீஸ்தவர், முதிய கன்னிப்பெண் அல்லது ஒன்று, இரண்டு பிள்ளைகளுடைய விதவையைத் தோழமைக் கலியாணத்துக்கு (Companionship marriage) விரும்புகின்றார். மாதாந்த வருமானம் ரூபா 5,000/-, சேமிப்பில் ரூபா இரண்டு லட்சம், வாழ்க்கைத் துணை விரும்பிகள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். கடித விபரங்கள் இரகசியமாகவிருக்கும். விளம்பர இல: 4528 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4528

யாழ் இந்து உயர் வேளாள கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவரும் தீய பழக்கங்கள் அற்றவரும் 7ல் செவ்வாய் உள்ளவரும் ஏழு வருடமாக லண்டனில் (U K) டிப்ளோமா எஞ்சினியர் பட்டம் பெற்று பதவி வகிப்பவரும் மாதம் 20,000/- வருமானம் உடையவருமாகிய மணமகனுக்கு 27-34க்கும் இடைப்பட்ட ஆங்கில அறிவுள்ள நற்பண்புள்ள மணமகள் தேவை, முழுவிபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். விபரங்கட்கு; விளம்பர இல 4545 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 4545

யாழ்ப்பாணஇந்து வேளாள சமூகத்தைக் சேர்ந்த மேற்கு ஜேர்மனியில் ஏழு வருடமாக உத்தியோகத்தில் இருக்கும் நற்குணமுள்ள அற்ற செவ்வாய் தோஷம் இல்லாத 35 வயது மணமகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். மணமகள் அங்கு போய் விவாகம் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். குறிப்புடனும் படத்துடனும் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 4463, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4463

## சமூகசேவையாளர்



இலங்கை புகையிரத லிகிதர் சேவையில் திறம்பட சேவையாற்றியவரும் அன்பும், பண்பும் நிறைந்தவருமான வராத்துப்பளை வேலுப்பிள்ளை செல்வவிநாயகம் 48 வது வயதிலே இறைவனடி சேர்ந்து ஒரு மாதகாலமாகின்றது.

இலங்கை விமானப் படைக் காரியாலயத்தில் ' வருடங்கள் கடமையாற்றி 1963 ம் ஆண்டு இலங்கை புகையிரத லிகிதர் சேவைக்கு மாற்றப்பட்டு சிறந்த சேவையாற்றி வந்தவர். பழகுவதற்கு இனிய பண்பாளனை அமரர் செல்வவிநாயகம் ஒரு சிறந்த சமூக சேவையாளர் என்பதும் இறைபக்தர் என்பதும் யாவரும் அறிந்ததாகும். அன்னார் மறைந்தாலும் அவரின் சேவைகள் மக்கள் மத்தியிலிருந்து மறைந்து விடமாட்டாது அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஏ.என் எஸ். திருச்செல்வம்

## சிவாவுக்காகப் பிரார்த்தனை

(கல்வியங்காடு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும்' நல்லூர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திரு. மு. சிவசிதம்பரத்தின் 62-வது பிறந்ததினத்தை முன்னிட்டு அன்னார் நீடூழிவாழவேண்டி யாழ். வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. அப்பையா தலைமையில் ஆதரவாளர்கள், அன்பர்கள் விசேட அர்ச்சனையும் வழிபாடுகளும் செய்தனர்.

## இன்று ஆடிப்பூரவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் - மணற்காடு அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் ஆடிப்பூரவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகிறது

இவ்விழாவை முன்னிட்டு 108 கலச சங்காபிஷேகமும் விசேட பூசை ஆராதனைகளும், திருவீதி உலாவும் இடம் பெறும் விழாவில் வித்துவான் மு சபாரத்தினம் 'ஆடிப்பூரம்' என்னும் பொருள்பற்றி விரிவுரை வழங்குவார்.

# ஆபிரிக்காவின் சீரழிவுக்கு சர்வதேச பொருளாதார அமைப்பே காரணம்

## ஆபிரிக்க ஒற்றுமை தாபனம் கண்டனம்

அடிஸ்அபாபா, ஜுலை 20 ஆபிரிக்கக் கண்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நிலைமைக்கு தற்போதைய சர்வதேச பொருளாதார அமைப்புத்தான் காரணம் என்று ஆபிரிக்க ஒற்றுமைத் தாபன நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த மாநாடு தற்போது எதியோப்பியாவின் தலைநகரான அடிஸ்அபாபாவில் நடைபெறுகிறது.

இம் மாநாட்டில் 21ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 50 தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்கள். மாநாட்டில் முக்கியமாக ஆபிரிக்காவின் கடுமையான வறட்சிநிலைமையும், அதனால் ஏற்பட்ட கடுமையான பொருளாதார சீரழிவு குறித்தும் ஆராயப்பட்டது. ஆபிரிக்காவின் தற்போதைய பொருளாதாரநிலையை ஆராய்வதற்காக ஐ. நா. சபையின் விசேட மாநாடு ஒன்று விரைவில் கூட்டப்படவேண்டும் என்றும் இத் தலைவர்கள் மாகாநாட்டு தீர்மானத்தில் தெரிவித்துள்ளனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்காவுக்கு பெருந்தொகையான நிதிஉதவி வழங்கப்பட வேண்டும் என்றும் மகாநாட்டில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## இத்தாலியில் அணைக்கட்டு உடைப்பு

## 260 பேர் உயிரிழந்தனர்!

### 70 சடலங்கள் மீட்பு

ரோம், ஜுலை 20

இத்தாலி நாட்டின் வடக்குப் பிரதேசத்தில் அணைக்கட்டு ஒன்று உடைந்து வீழ்ந்ததினால் 260க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர் என அஞ்சப்படுகிறது.

கடும்மழை பெய்தமையைத் தொடர்ந்து இத்த அணைக்கட்டு உடைப்பெடுத்ததாகவும் அது உடைப்பெடுத்த 20 விநாடிக்குள் இரண்டரை லட்சம் கனஅடி நீர் வெளியேறியதினால் இந்த பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பலியான 260 பேரில் 70 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது ஏனைய சடலங்களை தேடும்பணி தொடர்கிறது

அத்துடன் 10 வீடுகளும், 3 உல்லாசப்பயணிகள் ஹோட்டல்களும் வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளன ஆயினும் வெள்ள இடிபாடுகளிடையே 6 பேர் உயிர் தப்பிவிட்டனர், இந்தப்பகுதி உல்லாசப்பயணிகள் வருகைக்கு பெயர்போன இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலியின் இதேபகுதியில் 1963ம் ஆண்டு ஏற்பட்ட இதேபோன்றதொரு அணைக்கட்டு உடைப்பில் 2000 மக்கள் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பூட்டோவின் மகன் மரணம்

பாரிஸ், ஜுலை 20

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோவின் மகன் ஷா நர்வாஸ் கான் பூட்டோ நேற்று முன்தினம் பிரான்ஸில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

வட பிரான்ஸில் இறந்த நிலையில் இவரது சடலம் கிடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## அச்சம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரயாணிகள் படகில் நடந்த வன்செயலில் காயமடைந்து சுகமடைந்தவர்கள் திரும்பவும் நெடுந்தீவிற்கும் செல்ல அஞ்சுவதாகச் சொல்லப்படுகின்றது.

இதுவரையில் ஒருவர் மாத்திரமே திரும்பியுள்ளதாகவும் மற்றையவர்கள் தத்தமது உறவுக்காரர்களுடன் தங்கியுள்ளதாகவும் தெரிகின்றது.

## பிரிந்த ‘கொரியாக்கள்’ மீண்டும் இணைய வேண்டும்

### இந்தியா விருப்பம்

(புதுடில்லி)

பிரிந்திருக்கும் வட-தென் கொரியாக்கள் அமைதியான முறையில் வெளிநாடுகளின் தலையீடு இன்றி தமக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் ஒன்றிணைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா தென்கொரியாவிடம் தெரிவித்துள்ளது.

தற்போது புதுடில்லி வந்திருக்கும் தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் திரு. வொன் கிங் லீயுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனப். குர்ஷித் ஆலம்கான் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இரு நாடுகளும் முதலில் வன்முறைகளை கைவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒன்றிணைய முடியும் என்று குர்ஷித் ஆலம்கான் நம்பிக்கை தெரிவித்தார்.

வடகொரியாவுடன்தொடர்ச்சியான பேச்சுக்கள் நடத்த தென்கொரியா தொடர்ந்தும் முயற்சிசெய்கின்றது என்று தென்கொரியா வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

## உரும்பிராய் சிறுவன் மரணம்

## இறந்தவரின் அண்ணன்மீது கடைக்காரருக்கு சந்தேகம்

[யாழ்ப்பாணம்]

‘எனது தேநீர்க் கடையில் இறந்த ஜெகேந்திரனும் அவரது சகோதரன் கந்தரூபனும் வேலைசெய்தார்கள். இறந்தவரின் சம்பளத்தைத் தன்னிடம் தராவிட்டால் தம்பியைச் சரிக்கட்டுவேன் என்று கந்தரூபன் கூறினார். இதனால் கந்தரூபன் மீது எனக்குச் சந்தேகமுள்ளது’.

உரும்பராயைச் சேர்ந்த குப்புசாமி ஜெகேந்திரன் (12 வயது) என்ற வேலைக்காரச் சிறுவனின் மரண விசாரணையில் சாட்சியமளித்த கடை உரிமையாளர் எம் ஏகாம்பர பிள்ளை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றது.

உரும்பராய் கிராம சேவகர் எஸ். ஜே. செல்லத்துரை சாட்சிக்கு ஆஜர்செய்தார்.

எம். ஏகாம்பரபிள்ளை மேலும் கூறியதாவது:-

‘இறந்தவர் இரு மாதங்களின் முன் வேலைக்குச் சேர்ந்தார். கந்தரூபன்தான் அவரைக் கூட்டிவந்தார். இருவரும் சகோதரர்கள்.

இறந்தவரின் சம்பளத்தைத் தன்னிடம் தருமாறு அண்ணன் கேட்டபோது, இறந்தவர் அதற்கு மறுத்துவிட்டார். ‘சம்பளத்தைத் தராவிட்டால் தம்பியைச் சரிக்கட்டுவேன்’ என்று என்முன்னால்தம்பியிடம் கந்தரூபன் கூறினார். அதன் பின் இருவரும் கதைப்பதில்லை.

சம்பவதினமிரவு 8 மணிபோல் நான் கடையைப் பூட்டிவிட்டு இறந்தவரிடம் தண்ணீர் கொண்டுவரும்படிசொன்னேன். அவர் கிணற்றுப் பக்கம் போனார். அவர் திரும்பி வராததினால் கூப்பிட்டுப் பார்த்தபின் கிணற்றில் பார்த்தேன் ‘டோர்ச்லைட்’ எரிந்தபடி தண்ணீருக்குள் கிடந்தது. நான் குளறியபோது ஒருவரும் வரவில்லை. பின் ஒழுங்கையில் ஜெகதீஸ்வரனும், கந்தியும் வந்தார்கள். அவர்களின் உதவியுடன் சடலத்தை வெளியில் எடுத்தேன் பேச்சு மூச்சில்லை; உடம்பில் சூடுமில்லை. அவர் இறந்துவிட்டார் என அறிந்தேன்.

அண்ணன் கந்தரூபன் அன்று லீவு எடுத்திருந்தார் இரவு அவர் முன் கடையில் படுத்திருந்ததாகக் கூட்டிவந்தார்கள் எனக்கு அவர்மீது சந்தேகமிருக்கிறது அவர்தான் இச்செயலைச் செய்திருக்கவேண்டுமென நினைக்கிறேன்’

விசாரணை இம்மாதம் 22ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வீதித்தடை தொடர்கிறது

(வவனியா]

வாகனப் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டிருந்த வவனியா தபாற்கந்தோர் வீதி இன்னமும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவேஇருக்கின்றது.

பழைய பொலிஸ்நிலையச் சந்தி குறித்த நுழைவாசலிலும் ஆஸ்பத்திரிச்சந்தியிலும் போடப்பட்டுள்ள வாகனப் போக்குவரத்திற்கான வேலித் தடைகள் இன்னும் அகற்றப் படவில்லை.

## கசிப்பு விற்பனையைத் தடுக்க நலன்புரிச்சங்கம் முயற்சி

[சாவகச்சேரி]

கசிப்பு உற்பத்தி விற்பனையாளர்களையும், சட்ட விரோதமாகக் கள் விற்பனை செய்பவர்களையும் தடுக்கும் நடவடிக்கைகளில் ‘‘சாவகச்சேரி சிவில் தொழிலாளர்கள் நலன்புரி ஒன்றியம்’’ ஈடுபட்டுள்ளது.

இவ்வொன்றியத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக அண்மையில் சாவகச்சேரியை உள்ளடக்கிய பல கிராமங்களில் கள்ளத்தனமாகக் கள் விற்பனை செய்துவந்த விற்பனையாளர்களை எச்சரித்து அவர்களிடம் விற்பனைக்கிருந்த கள், மற்றும் உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன.

இதுபோன்ற கசிப்பு உற்பத்தியாளர்களுக்கான எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒவ்வொரு கிராமங்களிலும் மேற்கொள்ளவுள்ளதாக ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இப்பணிக்காக ஐம்பது இளைஞர்கள் இதுவரை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேலும் பல இடங்களிலும் இந் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## குடிநீர்த் தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது கடும் வரட்சி காரணமாகக் கிணறுகளில் தண்ணீர் உவர் ஆகிவிட்டதால் பெருந்தொகையான மக்கள் சுமார் 3 மைல்களுக்கு அப்பாலுள்ள குடிநீர்க் கிணறுகளுக்குக் கால் நடையாகச் சென்று தண்ணீரைத் தலையில் சுமந்துகொண்டு

[13-ம் பக்கம் பார்க்க)

## கம்பன் விழா

(வட்டுக்கோட்டை)

அகில இலங்கை கம்பன் கழகம் எதிர்வரும் 9ம், 10ம் 11ம் திகதிகளில் நல்லை ஆதீனத்தில் கம்பன் விழாவை நடத்தவுள்ளனர். முதல் நாள் கலையரங்கும் இரண்டாம்நாள் கருத்தரங்கும் மூன்றும் நாள் இலக்கியஆணைக்குழுவும் நடைபெறும்.

## வவனியா இலங்கை வங்கி வேலை நேரம்

(வவனியா)

வாரநாட்களில் வவனியா இலங்கை வங்கியில் வேலைகள் கொடுக்கல், வாங்கல் காலை 9 மணிமுதல் 12 மணிவரைநடைபெறுகின்றது.

அதாவது 3 மணித்தியாலங்கள் வாடிக்கையாளர்கள் தமது வங்கிவேலைகளை கவனிக்கலாம்.

கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு இலகுவாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

## அளவெட்டி முத்துமாரியம்மன் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் வரை நடைபெறும்.

இம்மாதம் 30-ம் திகதி தேர் உற்சவமும் 31-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

உடுவில் கிழக்கு ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் முதல் முறையாக மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு விழாக்கள் நடைபெறும்.

மஹோற்சவ தேர்திருவிழா இம்மாதம் 30-ம் திகதியும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் அடுத்த மாதம் 1-ம் திகதி பூங்காவனமும் இடம் பெறும். (வி

## குழந்தைகள் பாதுகாப்புக்கான யு. கே. இயக்கப் பிரதிநிதி கரைநகர் விஜயம்

(காரைநகர்)
காரைநகருக்கு விஜயம் செய்த ஐக்கிய ராச்சிய குழந்தைகள் பாதுகாப்பு இயககத்தின் சுகாதாரப் பிரதிநிதி செல்வி கிளேயர் காரைநகர் சுகதார நிலையத்திலுள்ள குழந்தைகளைப் பார்வையிட்டுப் பரிசோதித்தார்.

இப்பரிசோதனையின் போது தெரிவுசெய்யப்பட்ட 75 குழந்தைகளுக்கு வேண்டிய உணவு, மருத்துவ வசதிகளைக் கொடுக்க அவர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

ஒருங்கிணைக்கப்பட்ட அகதிகள் உதவி புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவில் செல்வி கிளேயர் இங்கு விஜயம் செய்திருந்தார். இந்நிறுவனத்தைச் சேர்ந்த திரு கைலாசபதியும், நிறுவனத்தின் ஏனைய பிரதிநிதிகளும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## சுண்டிக்குளியில் விரைவில் மீன்விற்பனை நிலையம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி - கடற்கரை வீதி சந்தியில் புதிய மீன்விற்பனை நிலையம் ஒன்று மிக விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

பூநகரி, கல்முனைப் பகுதிகளில் பிடிக்கும் மீன்களை கடந்த பல வருடங்களாக பாஷையூர், குருநகர் மீன் விற்பனை நிலையங்களில் வைத்து விற்பனை செய்து வந்ததனால் உள்ளூரில் மீன் பிடிப்பவர்களின் விற்பனை பாதிக்கப்பட்டு வந்தது.

இதுபற்றி யாழ். அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இப்புதிய விற்பனை நிலையம் அமைப்பதற்கு உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மேற்படிப் புதிய மீன் விற்பனை நிலையத்துக்கான அத்திபாரக் கல்லை நேற்று முன்தினம், வைத்தியக் கலாநிதி ஜே. பி. ஸி. பிலிப் நாட்டி வைத்தார்.

இப்புதிய விற்பனை நிலையம் அடுத்தமாதம் ஆரம்பத்திலிருந்து செயல்படும் எனத் தெரியவருகின்றது. (வி)

### தபால் ரயிலில்

## நல்லூர் இளைஞரிடம் ரூ 29,200 அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)
கொழும்பு - காங்கசன்துறை இரவு தபால் ரயிலில் வந்த நல்லூரைச் சேர்ந்த இளைஞர் சுந்தரராஜா மில்ற்றன் அரசரத்தினம் என்பவரிடம் இனந் தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று 29,200 ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் இம்மாதம் 17 ஆம் திகதி இரவுபொல்காவலைக்கும் மகோவிற்கும் இடையில் நிகழ்ந்துள்ளதாக பணத்தை இழந்த இளைஞர் மில்ற்றன் யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

### வடபகுதியில்

## சில வங்கிக் கிளைகள் அடுத்த மாதம் இயங்கும்

(கரவெட்டி)
வடக்கில் தற்போது மூடப்பட்டிருக்கும் வங்கிக் கிளைகளில், நெல்லியடி, சங்கானை மக்கள் வங்கிக் கிளைகளும், நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையும் அடுத்த மாதம் 1-ம் திகதி முதல் மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மூடப்பட்டிருக்கும் ஏனைய வங்கிக்கிளைகளான முருங்கன், மாங்குளம், பளை, புங்குடுதீவு ஆகியவை பற்றி 'பாதுகாப்பு' காரணங்களால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என அறியப்படுகிறது.

அத்துடன், அடுத்த மாதம் முதல் வடபகுதி வங்கிகளில் நகைஅடகு வைத்தவர்கள் நகைகளை மீளப்பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஓய்வூதியம் வழங்கப்படுவது போல் பாதுகாப்பான ஓர் இடத்தில் குறித்த தினங்களில் குறித்த வங்கிக் கிளைகளின் வாடிக்கையாளர் தங்கள் நகைகளை மீட்கப்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

## இன்று நடக்கும் இசை நிகழ்ச்சி

[கல்வியங்காடு]
கடந்த வருடம் நவம்பர் மாதம் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்த யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் இன்னிசை விருந்து இம்மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சென்.பற்றிக்ஸ் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ராஜன்ஸ் குழுவினரின் யாழ் ரமணன் வழங்கும் இந்த இன்னிசைநிகழ்ச்சியைசென் பற்றிக்ஸ்கல் லூரியின்இன்ரறக்ட் கழகத்தினா ஒழுங்கு செய்துள்ளனர்.

### பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு

# காலம் கடந்தாகிலும் பலன்கிடைக்கவே செய்யும்

### அரசாங்க அதிபர் நம்பிக்கை

(கல்வியங்காடு)
''பாதிக்கப்பட்ட ஊழியர்கள் உனடடியாகத் திகுந்த நிவாரணங்களை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியால் போயிருக்கலாம் ஆனல் காலங் கடந்தாயினும், சில சமயம் ஐந்து பத்து வருடங்கள் கழிந்த பின்பாகுதல் நிச்சயம் பலனடைந்தே தீருவர் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.''

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு ஒழுங்குசெய்திருந்த ஆண்டுக் கூட்டத்தில் பேசும்போது யாழ் அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''பாதிக்கப்பட்ட ஊழியர்களாகிய நீங்கள் உங்கள் விபரங்களை ஒன்று திரட்டி அறிக்கையாக உங்கள் சங்கத்திடமும், உதவி அரச அதிபர்களிடமும் அனுப்பிவையுங்கள். அவை உங்களுக்கு ஏதோ ஒரு காலத்தில் பலனைப் பெற்றுத்தரும் இடமாற்றம் வேண்டும் என்று கூறுகின்ற ஊழியர்கள் விண்ணப்பங்களை எனக்கு அனுப்பிவைத்தால் அவைகளைச் சிபார்சுசெய்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பிவைக்க முடியும்'' என்றார்.

பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஐ சம்பந்தமூர்த்தி தலைமையில் இலங்கை - மலாயர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில், அகதிகள புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம் பேசுகையில், ''அகதிகளாக வந்து சேர்ந்தவர்களுக்கு மூன்று மாதம் வரை உதவி வழங்கினேம். தற்போதும் அப்படியே செய்துவருகிறேம். இதற்குமேல் அவர்களே தம் வாழ்க்கை நிலையைக் கவனித்துக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டுவந்த ஊழியர்களுக்கு உங்கள் தொழிற்சாலைகளில் ஒருவர் இருவருக்காகுதல் வேலைவாய்ப்புக் கொடுங்கள் என யாழ்ப்பாணத்துத் தொழிலதிபர்களை அணுகிக் கேட்டோம் 'ஈழநாடு' பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கம்கூட எழுதப்பட்டது'' என்றார்.

திரு. ஐ சம்பந்தமூர்த்தி தமது தலைமையுரையில் ''பாதிக்கப்பட்டோர் சங்கம் தன்னாலான சிறு சிறு உதவிகளை செய்து வருகின்றது. கடன்பெற்று தொழில் வாய்ப்பு செய்ய இடமுண்டு. பாதிக்கப்பட்ட ஊழியர்களின் வரலாறு புத்தகமாக வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம்'' என்றார்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பால சுபபிரமணியம் பேசுகையில்; ''1958 முதல் இன்றுவரை பல கலவரங்கள் ஏற்பட்டு தமிழர் பாதிக்கப்பட்டனர். ஆனல் மூன்றும் மாதம் திரும்பி தொழில் செய்ய சென்றுவிட்டனர் ஆனல் 983ல் நடந்த கலவரம் அப்படியல்ல அகதிகளாக அன்று வந்தோர் அமைத்த சங்கம் இன்று ஆண்டுக் கூட்டம் நடாத்து மளவிற்கு இறுக்கமாக நிலைத்து நிற்கிறது. வெளிநாட்டவர் சிலர் எம்மை சந்திக்கும் போது தனித்தனியாக நாடு இருந்துவிட்டால் இப்படிப் பிரச்சனை அடிக்கடி வராது என அபிப்பிராயம் தெரிவிப்பதுண்டு'' என்றார். இறுதியில் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது.

## மன அமைதிக்கு ஆலய வழிபாடு

(யாழ்ப்பாணம்)
''ஆலயங்களும் இறைவனின் திருவுருவக் கோலங்களும் அழகுமிக்கனவாகும். அழகு மனத்திற்கு மகிழ்வை அளிப்பதாகும். மக்கள் இறைவழிபாடு செய்யவும் மனஅமைதி பெறவும் ஆலயங்களில் புனிதமாக வழிபடவேண்டும்'' என்று உடுவில் அருள்மிகு மீனுட்சி சுந்தரேஸ்வரர் ஆலய சங்காபிஷேக விழாவில் சிறப்புச் சொற்பொழிவு செய்த திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தமது உரையில் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் தொடர்ந்து பேசும்போது; ''மனிதப் பிறவியின் நோக்கமே இறையருள் பெற்று உய்வதேயாகும். ஆலய வழிபாட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும், ஆலயத்தொண்டினையும் அப்பர் சுவாமிகள் தமது போதனையில் மட்டுமின்றிச் சாதனையிலும் நிலைநாட்டினர்,'' என்றும் கூறினர்.

### பரிசாரர்கள் பதவி

# சிற்றூழியர்கள் விண்ணப்பிக்கலாம்

(பண்டத்தரிப்பு)
யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஆண் பெண் பரிசாரகர்கள் (அற்றண்டன்) பதவிகளுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக வைத்திய சாலைகளில் சிற்றூழியர்களாக கடமையாற்றியோரிடமிருந்து விண்ணப்பங்களை யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் கோரியுள்ளது.

சுகாதார திணைக்களத்தில் ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்தவர்களும், எட்டாம் வகுப்பு பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இப் பதவிக்கு விண்ணபபிக்கலாம் என்றும், தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவருக்கு ஊடாக இம்மாதம் 23-ம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்போருக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 30-ம் திகதி நடைறெவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

### தென்னிந்திய

## திருச்சபை பேராயர் நெடுந்தீவு விஜயம்!

(நெடுந்தீவு)
தென்இந்தியத் திருச்சபை யாழ்ப்பாணம் அத்தியட்சாதீனத்தின் பேராயர் அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் இன்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நெடுந்தீவுக் கடலில் 'குமுதினி' படகில் வன்செயலுக்குள்ளாகி உயிர் நீத்தவர்களின் குடும்பங்களை நேரிற் சந்திக்கவிருக்கும் பேராயர், உயிர் நீத்த குடும்பங்களுக்கும், காயமுற்றோருக்கும் ஆதீனத்தின் சார்பில் நிதி உதவி வழங்கப்படவுள்ளதாகவும், வன்செயலுக்கு இலக்காகி உயிர்நீத்தவர்களின் குடும்பங்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்த முடியுமா என்பது பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பேராயர் வருகைக்கானசகல ஏற்பாடுகளையும் நெடுந்தீவுப் பிரஜைகள் குழு இணைச் செயலாளரும், நெடுந்தீவு திருச்சபையின் குருவுமாகிய அருட்திரு. டி. எஸ். தியாகராசா செய்துள்ளார்.

## பஸ் சேவை ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)
நீண்ட காலமாக நடைபெறாது இருந்துவந்த பருத்தித்துறை-மூளாய் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை டிப்போவினல் நடாத்தப்பட்டு வரும் இப்பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதையிட்டு இப் பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# வாழ்வுடன் இணைந்து வரும் எலெக்ட்ரோனிக் உறவு

★ பெஞ்சமின் இராசரத்தினம்

இன்று நாம் எலெக்ட்ரோனிக் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த எலெக்ட்ரோனிக் சாதனைகள் என்ன மாதிரியான மாயாஜால வித்தையெல்லாம் புரிந்துவருகின்றன என்பதை நாம் ஓரளவுக்கு அறிந்திருக்கிறோம். இன்றைய நவீன உற்பத்தித்துறையில் எலெக்ட்ரோனிக் சாதனங்கள் சம்பந்தப்படாத பொருள்களே இல்லையெனக் கூறலாம். மருத்துவம், விவசாயம் போன்ற துறைகளிலும் எலெக்ட்ரோனிக் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

காலம் பொன்னானது என்பார்கள். அதுவும் இன்றைய எலெக்ரோனிக் யுகத்தில் காலம் மிகமிகப் பொன்னானது என்றுதான் கூறவேண்டும். ஒரு சிலருக்குத் தங்கள் கடமைகளைச் செய்வதற்கே காலம் போதாமல் இருக்கிறது. பலருக்கோ காலம் வீணே விரயமாகிக் கொண்டிருக்கிறது. எது எப்படி இருப்பினும் இந்தக் காலத்தைக் கணிப்பதற்கு மனிதன் கண்டுபிடித்திருக்கும் அற்புத சாதனமே கடிகாரம். ஆரம்பத்தில் பெரிய அளவில் உருவான இது விஞ்ஞான வளர்ச்சியில் கைக்கடிகாரங்களாகவும் பரிணமித்திருக்கின்றது. இந்தச் சின்னஞ் சிறிய கைக்கடிகாரத்துக்குள்ளும் கம்பியூட்டர்கள் புகுந்து அசுர சாதனைகள் புரிந்துவருகின்றன.

## கானமிசைக்கும் கணக்குக் காட்டும்

நேரம் பிசகாமல் ஒவ்வொரு மணித்தியாலமும் 'கீக் கீக்' எனச் சமிக்ஞை ஒலி எழுப்பும் கைக்கடிகாரங்கள் இன்று நம்மிடையே மலிந்து உள்ளன. இன்னும் சில, காலையில் இனிமையான நாதம் எழுப்பி நம்மைப் படுக்கையிலிருந்து உற்சாகத்துடன் எழுப்பிவிடுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள சீதோஷ்ண நிலையை நினைத்த மாத்திரத்தில் கணித்துக் காட்டும் வசதி படைத்த கைக்கடிகாரங்களும் இருக்கின்றன. கடைக்குப் போய் பொருள்களை வாங்கிய பிறகு கணக்குப் பார்ப்பதற்கு நாம் தலையைச் சொறிய வேண்டியதில்லை. கைக்கடிகாரத்திலுள்ள சில பட்டன்களைத் தட்டிவிட்டால் போதும், சரியான கணக்கைக் கணப்பொழுதில் கடிகாரம் காட்டிவிடும். இத்தனையும் மாயமா அல்லது மந்திரமா என்று கேட்கத் தோன்றும். அது மாயமுமல்ல மந்திரமுமல்ல. மனிதனின் அதிஅற்புதக் கண்டுபிடிப்பான எலெக்ட்ரோனிக் அமைப்பு முறையே, இத்தனை வித்தைகளையும் இந்தச் சின்னஞ்சிறிய கைக்கடிகாரத்துக்குள் புரிகின்றது.

ஒரு மிகச்சிறிய கடிகாரத்துக்குள் இதுபோன்ற எத்தனையோ அற்புத வசதிகள் இருப்பது போதாதாம். இன்னும் பலவற்றைச் சேர்க்க வேண்டுமென்ற வேட்கையில் கைக்கடிகார அமைப்புத் துறையிலும், உற்பத்தித் துறையிலும் ஈடுபட்டிருக்கும் தொழில்நுட்பவியலாளர்கள் அரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கண்ணுக்குப் புலப்படாத நுண் அமைப்புத் தொழில் நுட்பமுறை இன்று பெருமளவில் வளர்ச்சி கண்டிருக்கிறது. அந்தத் தொழில்நுட்ப முறையைக் கைக்கடிகார உற்பத்தித் துறையிலும் அறிமுகப்படுத்தி இன்னும் பல புதிய கண்டு பிடிப்புகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றனர் கைக்கடிகார உற்பத்தியாளர்கள்.

## இருதயத்துடிப்பை அறியும் கைக்கடிகாரம்

ஒருவருடைய இருதயத் துடிப்பைக்கூடக் கணிக்கக் கூடிய கைக்கடிகாரங்களும் தற்போது விற்பனைக்குவர ஆரம்பித்திருக்கின்றன. இது மாத்திரமல்ல காலையில் நம்முடன் இனிமையாக அளவளாவுவதற்கும் உற்ற துணையாக கைக்கடிகாரங்கள் விரைவில் வர இருக்கின்றன. நமதுவீட்டு கம்பியூட்டரில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களைத் தூர இடங்களுக்கு அனுப்பி வைக்கக்கூடிய கைக்கடிகாரங்களும் தற்போது அறிமுகமாகியுள்ளன. இத்தனை நுணுக்கமான அமைப்புக்கள் இந்தக் கைக்கடிகாரங்களில் இருந்தபோதிலும் அவை கச்சிதமான நேரத்தைக் காட்டத்தவறுவதில்லை.

ஒருவர் தேகப்பயிற்சி செய்யும்போது அவருடைய நாடித் துடிப்பை அளவிட்டுக்காட்டும் மற்றொருவகைக் கைக்கடிகாரமும் தற்போது விற்பனைக்கு வந்திருக்கிறது. இந்தக் கடிகாரத்தை அணிந்து கொள்பவர் அவருடைய நெஞ்சுப்பகுதியில் விசேஷ தோள்பட்டி ஒன்றையும் அணிந்து கொள்ள வேண்டும். இந்தப் பட்டியில் இருதயத் துடிப்பைக் கைக்கடிகாரத்துக்குஅனுப்பிவைக்கும்விசேஷ அமைப்புக்கள் நுண்ணிய அளவில் பொருத்தப்பட்டிருக்கின்றன. கடிகாரத்திலுள்ள சிறிய பட்டன் ஒன்றை அழுத்தியதும் நிமிடத்துக்கு இருதயத் துடிப்பு எவ்வளவு என்பதை கைக்கடிகாரம் துல்லியமாகக் காட்டிவிடும். அத்துடன் அளவுக்கதிகமாக இருதயத்துடிப்பு ஏற்படும் போது ஒருவரை எச்சரிக்கும் விதத்தில் அந்தக்கடிகாரத்தில் உள்ள எச்சரிக்கைச் சமிக்ஞை உடனே ஒலி எழுப்பும். தேகப்பயிற்சி செய்பவர் தமது பயிற்சியைக் குறைத்துக் கொண்டு ஓய்வு எடுப்பதற்கு இந்தச் சமிக்ஞைஒலி அவருக்கு வழி செய்கிறது. இந்த விசேஷ கைக்கடிகாரத்தின் விலை 99 அமெரிக்க டொலர்களாகும்.

## பேசும் கைக்கடிகாரம்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பேசும் சுவர்க்கடிகாரங்கள் விற்பனைக்கு வந்ததை நாம் அறிவோம், இன்றுபேசும் கைக்கடிகாரங்கள் அறிமுகமாகியிருக்கின்றன. ஜப்பானைச் சேர்ந்த மிகப் பிரபல்யமான கைக்கடிகார உற்பத்தி நிறுவனம் ஒன்று இந்த விநோதமான கைக்கடிகாரத்தை உற்பத்தி செய்திருக்கின்றது. இனிமையான பெண்குரலில் இந்தக் கைக்கடிகாரம் இன்மொழிபேசி நம்மைக் கிறங்க வைக்கும். தன்னியக்க முறையில் ஒவ்வொரு அரைமணி நேரத்துக்கும் இந்த இனிய பெண்குரல் நமக்குச் சரியான நேரத்தை அறிவிக்கும். அத்துடன் காலையில் நம்மை இந்தக் குரல் அன்புடன் எழுப்பி விடுவதற்கும் உதவி செய்கிறது. நாம் அந்த இனியகுரலை மீண்டும் மீண்டும் கேட்க ஆசைப்பட்டால் அல்லது இன்னும் சிறிதுநேரம் படுக்கையில் புரளவேண்டுமானால் அந்தக் கடிகாரத்தில் உள்ள பட்டனை அழுத்திவிட்டால் சரி. சரியாக ஐந்து நிமிடத்துக்குப் பிறகு, 'தயவுசெய்து அவசரமாகச் செயல்படுங்கள்' என்று கெஞ்சும் பாணியில் அந்தக்குரல் மேலும் இனிமைப்படுத்தும்.

இந்தக் கடிகாரம் ஆங்கில மொழியில் மாத்திரமே பேசக் கூடியது. இருப்பினும் குரல் இனிமையை அனுபவிப்பதற்கு மொழி தெரியவேண்டிய அவசியமில்லைத்தானே. இந்தக் கைக்கடிகாரம் இன்று பல்வேறு நாடுகளிலும் பெருமளவில் விற்பனையாகி வருகிறது. அறுபது அமெரிக்க டொலர்கள் கொடுத்து இந்தக் கைக்கடிகாரத்தை விலைக்கு வாங்கலாம்.

கல்குலேட்டர்கள் பொருத்தப்பட்ட கைக்கடிகாரங்களை நம்மில் பலரும் அணிந்துவருகிறோம். இந்தக் கைக்கடிகாரங்களில் சிறிய அளவிலான பட்டன்கள் உள்ளன. இந்த பட்டன்களை அழுத்தி எமக்குத் தேவையான கணக்குகளைச் சரிபார்த்துக் கொள்ள முடியும். எனினும் இந்த பட்டன்கள் மிகவும் சிறியவையாக இருப்பதால் அவற்றை முறையாகப் பயன்படுத்துவதில் சில சிரமங்கள் உள்ளன.

இதனைக் கைக்கடிகார உற்பத்தியாளர்கள் மறந்து விடவில்லை. இந்த பட்டன்கள் இல்லாமலேயே எமக்குத் தேவையான கணக்குகளைச் சரிபார்த்துக்கொள்ளக் கூடிய நவீன கைக்கடிகாரம் ஒன்றை ஜப்பான் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. இந்தக் கடிகாரத்திலுள்ள விசேஷ

[12-ம் பக்கம் பார்க்க]

---

## இன்னும் ஒரு அகலிகை

உன்னைத் தேடி
உட்கார்ந்திருக்கிறாள்
இன்னும்
ஒரு
அகலிகை!
வெறுமனே
படவல்ல
உன் காலால்
உதைபட!
சாதிக்கொடுமையும் வெறும்
போலிப் பெருமையும்
சீதனச் சிறுமையும்
சுயநலப் புத்தியும்
சாபமாய்ப்பெற்ற
சமூக அகலிகை!
ஓ...
நாளைய மனிதனே
உன்னைத்தேடி
உட்கார்ந்திருக்கிறாள்
இன்னும்
ஒரு
அகலிகை!

— அ. தத்வசுதன்

---

## மருத்துவ அற்புதங்களும் மானிட தெய்வங்களும்

"மரணத்துக்கு அஞ்சாதவர்களே உயிர்வாழத் தகுதியுள்ளவர்கள்" என்றார் அமெரிக்க ஜெனரல் மெக் ஆர்தர்.

இரண்டாவது உலக யுத்தத்தின் வெற்றி வீரர் மெக் ஆர்தர் தோல்வி கண்ட ஜப்பானுக்கு ராணுவ ஆட்சித் தலைவராக நாட்டின் புனரமைப்புக்குப் பொறுப்பேற்றார்.

மரணத்துக்கு அஞ்சாமை போருக்கு எவ்வளவு அவசியமோ, அது வாழ்வுக்கு அவ்வளவு அவசியம்.

முந்திய சனிக்கிழமை புற்றுநோய் சத்திரசிகிச்சைக்குள்ளான ஜனாதிபதி றீகன் மிக விரைவாக முறையில் குணமடைந்து வருவதற்கு மருத்துவத்தின் அற்புதம் மட்டுமல்ல நோயாளியின் அசாதாரண மனத்திட்பமுமே காரணம்.

சாகப்பயப்படாதவன் வாழத்துணிந்தவனென்பது புலனாகின்றது.

திட்டமிட்டபடி சோவியத்தலைவர் கொர்பச்சேவின் துடுக்கை எவ்விதத்திலும் வருகிற நவம்பர் உச்சியில் அடக்கிவிடவேண்டுமென்ற துணிவே புற்றுநோய்க்குச் செருப்படி கொடுத்தது.

நாடகமே இந்த உலகம் என்ற உண்மையைக் கண்ட இன்னொரு நடிகர் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆர். இத்தகைய துணிவை அமெரிக்க மருத்துவ நிபுணருக்கு அண்மையில் காட்டியிருந்தவர்

நடிகர் திலகங்கள், அரசியல் மேதைகள்-மனப்போக்கு இவ்வாறென்றால், மகான்கள் வரலாறு என்ன சொல்கிறது.

புற்றுநோய்க்குள்ளான ராமகிருஷ்ண பரமஹம்சரும் ரமணமகாரிஷியும் தடுக்க முடியாத நோயைப் புன்சிரிப்புடன் தாங்கிய வீரர்கள்.

சத்திரசிகிச்சைக்குள்ளான காந்தியடிகள் டாக்டர் கட்டளையிட்ட உணவை மறுத்தார். தமது அருமை மனைவி கஸ்தூரிபாயின் உயிர் ஊசலாடும் போதும் டாக்டர் வலியுறுத்திய மாமிச பானத்தை வழங்க மறுத்தார்

பார்வையை முற்றாக இழந்த ஆங்கிலப்பெரும் புலவன் மில்ற்றன், அதன்பின்னரே உலகம் போற்றும் 'இழந்த சுவர்க்கம்' என்ற பெருநூலைப் பாடினார்.

"கண்ணைக்கெடுத்தவன் கோலைக்கொடுத்தான்" என்றவர், "பொறுமையுடன் துன்பம் அனுபவிப்பவரும் இறைபணியாற்றுகின்றனர்" என்ற மணிவாக்கை உலகுக்கு வழங்கியிருக்கிறார்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியை நாம் மெச்சி அனுபவித்திருக்கும் போது; அழிந்து போகும் மனித குலத்தை உய்விக்க வந்த மானிட தெய்வங்களை மறந்துவிடக் கூடாது.

# நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—14

## சுந்தரரின் போர்ப் பிரகடனம்

முன்னெப்போதையும் விட இன்று நடைபெறும் சம்பவங்களின் போது தான் அடங்காத் தமிழனை அடிக்கடி நினைவுகூர வேண்டியுள்ளது.

'ஈழத் தமிழரின் உரிமைக்காகப் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் போராடுவேன்' என்று பலரும் பல தடவைகளிலும் சொல்லியிருக்கலாம்; போராட்டமும் நடத்தியிருக்கலாம்.

ஒரே சமயத்தில் பாராளுமன்றத்தினுள்ளே போராட்டத்தைத் தொடங்கி வெளியேயும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியவர் 'அடங்காத் தமிழன்' 'சுந்தர்'.

பாராளுமன்றத்தில் முக்கியமான ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. (விவாதம் பற்றிய விஷயமும் சரியானஆண்டும் நினைவில்லை) திரு. சுந்தரலிங்கம் அடிக்கடி குறுக்கிடு செய்து கொண்டிருந்தார். சபாநாயகர் பலதடவை எச்சரிக்கைசெய்தார் சபைக்கூட்டத்தைச் சிலநிமிடங்களுக்கு ஒத்திவைத்துப் பார்த்தார். 'அடங்காத் தமிழன்' அடங்குவதாக இல்லை!

சபைக் கூட்டத்திலிருந்து அவரை வெளியேற்றுவதென்று சபை முடிவெடுத்தது!

இதன் பின் சபையின் படைக்கலச் சேவிதருக்குச் சபாநாயகர் பணிப்புரை வழங்கினார். படைக்கலச் சேவிதர் வந்து என்ன சொல்லியும் சுந்தரர் ஏற்றுக்கொள்ளவில்லை! தனது ஆசனத்தை விட்டு அசைய முடியாதென்று மறுத்துவிட்டார்.

பொலிசார் வரவழைக்கப்பட்டனர், உடலிலும், உள்ளத்திலும் உறுதி கொண்ட அந்த உருவத்தைப் பெரும் சிரமத்துடன் பொலிசார் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். அவரோ தனது காலை நிலத்தில் பாவ வைக்க மறுத்துவிட்டார்.

பாவம் பொலிசார் எவ்வளவு நேரம் தான் அவரைச் சுமந்து நிற்பார்கள்!

பாராளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே காலிமுகக் கடற்கரையை நோக்கியபடி அரைச் சுவருடன் ஒட்டிய நடை பாதையில் சுந்தரரைக் கொண்டு வந்து வைத்தனர். அவர் அந்த இடத்திலேயே அமர்ந்து கொண்டார். பலர் வந்து ஆலோசனை கூறியும் அவர் அந்த இடத்தை விட்டு அசைய மறுத்துவிட்டார்.

''இவரைஎன்ன செய்வது?'' சபாநாயகர் முதல் பிரதமர் மற்றும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், பொலிசார் வரை தலையைக் குழப்பிக் கொண்டார்கள். பலரும் கூடிக் கூடி ஆலோசனை செய்தார்கள்.

பாராளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே வவனியா எம்.பி. சுந்தரலிங்கம் நடைபாதையில் அமைதியாகஅமர்ந்திருந்தார்.

காலிமுக மைதானத்தில் அங்குமிங்குமாக நின்றவர்கள் இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்காக பாராளுமன்றத்துக்கு வெளியே சுந்தரர் அமர்ந்திருந்த இடத்தின் முன் கூட்டம் கூடிவிட்டது!

மேலிடத்தில் நடந்த ஆலோசனைகளைத் தொடர்ந்தோ என்னவோ சுந்தரரை பம்பலப்பிட்டியில் மிலகிரியா அவனியூவிலுள்ள அவரது இல்லத்தில் கொண்டுபோய் விடுவதெனப் பொலிசார் தீர்மானித்து மீண்டும் அவரைக் குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிப் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு 'மிலகிரியா அவனியூ'வில் இறக்கிவிட்டுப் பொலிசார் தமது வாகனத்தில் வேகமாகத் திரும்பி விரைந்தனர்.

கீழே இறக்கி விடப்பட்ட சுந்தரர் அதே வேகத்தில் பொலிஸ் வாகனத்தைத் துரத்திவந்தார். வாகனம் போய்விட்டது! காலி வீதியில் நட்டநடுவே அமர்ந்துகொண்டார்!

வாகனப் போக்குவரத்து நிறைந்த இடம். சனக் கூட்டமும் அதிகரித்துவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் காடையர் சிலரும் அங்கு கூடிவிட்டனர். அவர்கள் சேட்டைகளும் ஆரம்பித்தன. நிலைமை மோசமாகவே சுந்தரரின் தம்பியார் திரு. தியாகலிங்கம், கியு. ஸி. யின் வீட்டிலிருந்தும் உறவினர்கள் வந்துவிட்டனர். நிலைமையைச் சமாளிக்க ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது! காடையர் கூட்டம் கலைந்தது!

மீண்டும் அங்கு பொலிசார் வந்தனர். அரசாங்கத்துக்கும் அரசியல் வாதிகளுக்கும் குடும்பத்தவர்களுக்கும் பொலிசாருக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருந்த சுந்தரரை மீண்டும் தமது வாகனத்தில் ஏற்றிய பொலிசார் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர்!

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் உயர் அதிகாரிகளும் என்ன சொல்லியும் கேட்கமறுத்துத் தனது நியாயத்தை எடுத்துக் கூறித் தனக்குள்ள உரிமைகளையும் எடுத்து வாதாடிக்கொண்டிருந்த சுந்தரருக்குப் பதில் சொல்ல முடியாமலும் வேறு எதுவித நடவடிக்கை எடுக்க முடியாமலும் தவித்த அதிகாரிகள் சுந்தரரைப் பொலிஸ் நிலையத்திலேயே தங்கும்படிவிட்டனர்!

மறுநாள் அவரைச் சமாளித்துஅனுப்பிவிடலாம் என்று நினைத்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது!

பொலிசாருடன் அவர்களது விடுதியிலேயே தங்கிய சுந்தரர் தமக்கு வெளியேயிருந்து உணவுகொண்டுவரக் கூடாதென்றும் பொலிசாரின் உணவையே தமக்கும் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மேலதிகமாக ஒருவருக்கு உணவு வழங்குவதற்கு வசதிகளில்லையென்று கூறப்பட்ட போதும் அதையும் ஏற்றுக்கொள்ள சுதந்தரர் மறுத்துவிட்டார்!

சில தினங்கள்வரை வெள்ளவத்தைப் பொலிஸ் நிலைப் பொலிஸ் விடுதியில் தங்கியிருந்த சுந்தரரினால் பொலிஸ் விடுதி கலகலப்புப் பெற்றதுடன், பல பொலிசார் நல்லறிவும் பெற்றனர்.

சுந்தரரின்
போர்ப் பிரகடனம்

1956ஆம்ஆண்டுஜூன் மாதம் ஐந்தாம் தேதி அன்றைய பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் 'சிங்களம்மட்டும்' மசோதாவைக் கொண்டுவந்தார்.

இந்தமசோதா மீதானவிவாதம் ஜூன் மாதம் 14-ஆந் தேதி இரவு முழுவதும் நடைபெற்று 15-ந் திகதி அதிகாலை மசோதா முழுக்கட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டதுடன் முடிவடைந்தது.

''தர்மம் குன்றி அதர்மம் தலைத்தோங்கும்போது; அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட நான்யுகந்தோறும் அவதரிப்பேன்'' குருக்ஷேத்திர யுத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா இந்த வாக்கியத்தைச் சொல்லி அர்ஜுனனைத் தனது கடமையைச் செய்யும்படி தூண்டினார். பகவத்கீதையில் போரிடும் படைகளின் இரு பக்கத்திலும் நண்பர்கள், ஆசிரியர்கள், சிஷ்யர்கள், சகோதரர்கள் நின்றார்களென்பது எப்படி வர்ணிக்கப்பட்டுள்ளதென்பதை நீங்கள் அறிவீர்கள் பிரதி சபாநாயகரவர்களே!''

இப்படித்தான் 'அடங்காத் தமிழன்' வவனியா திரு. செல்லப்பா சுந்தரலிங்கம் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ஆந் தேதி இரவு 9-28 மணிக்குப் பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து உரையாற்றத் தொடங்கினார்.

சுந்தரரைப் பொறுத்தவரையில் சபையில் இருபக்கத்திலும் நண்பர்களும், மாணவர்களும் சிஷ்யர்களும் நிறைந்திருந்தனர்!

நள்ளிரவு பன்னிரண்டுமணியளவில் தமது பேச்சை முடிக்கும்போது பிரதமரைப் பார்த்து, ''இந்த நாடு சிங்களராட்டை என்றும் தமிழிலங்கை என்றும் பிளவுபடுமானால் இந்த அரசாங்கத்தினதும் 1956-ஆம் ஆண்டின் இலங்கையின் பிரதம மந்திரியினதும் தவறானநடத்தைகளே காரணமென்று இ[illegible] வரலாறு கூறும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிமுடித்தார்.

அன்று (அதாவது ஜூன் 15-ஆந்தேதி) அதிகாலை 5-50 மணிக்கு சிங்களம் மட்டும் மசோதா மூன்றும் வாசிப்பின் மீது வாக்கெடுப்புநடைபெற்று மசோதா நிறைவேற்றப்படுவதற்கு முன் திரு. சுந்தரலிங்கம் மட்டும் இறுதியாகச் சில வார்த்தைகள் பேசினார். தமது பேச்சை ''பிரதமமந்திரி அவர்களே நான் போர் தொடுக்கத் தீர்மானித்துள்ளேன்; எப்படியான போர்! நீதிக்கானபோர்; நியாயத்துக்கான, தர்மத்துக்கான போர்! பிரதமர் அவர்களே நீங்கள் ஐக்கிய இலங்கையை நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்! இது சிறியவிஷயம்; நீங்கள் அஞ்ச வேண்டாம். ஆண்டவன் அருளால் பிளவுபட்ட இலங்கையே உங்களுக்குக் கிடைக்கும் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன்'' என்று முடித்தார்.

[ஆதாரம்: ஹன்சார்ட் ஜூன்-14 1966

**எஸ். எம். ஜி.**

(மிகுதி அடுத்த வாரம்)

---

## அத்திலாந்திக் பரிதாபம்!

உலகவரலாற்றில் மிகக் கொடுமையான விமான விபத்து ஏயர் இந்தியா விமான விபத்தாகும். இவ் விபத்துப் பற்றிய சில தகவல்கள்:

இறந்தோர் எண்ணிக்கை - 329
பயணிகள் தொகை - 304
இவர்களில் சிறுவர்கள் சிறுமிகள் - 77
கைக்குழந்தைகள் - 02
மணப்பெண்கள் - 02
தமிழர் - 39
இறந்தோரில் அதிக குடும்பத்தவரி கொண்டோர் - 04
விமானப் பணிப் பெண்கள் - 06
விஞ்ஞானிகள் - 06
விமானம் இறங்குவதற்கும் விபத்திற்கும் இடைப்பட்ட நேரம் 49 நிமிடம்

— ஸச்சி

---

## மானிப்பாய் இந்துவும் ஜூலாய் நான்கும்

'ஜூலாய் 4' - இந்தத் தொடருக்குத்தான் எத்தனை மந்திரசக்தி! ஆம், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனை வாழ்வில் மனம் சிலிர்க்க வைக்கும் மகிழ்நாளே இந்த யூலைத்திங்கள் நாலாம் நாள். எமது கல்லூரித் தாபகர் தினம் இது. எமது கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு விழாவும் இடம் பெறும் சிறப்புக்குரிய தினம் இது.

காலச் சூழ்நிலை காரணமாகக் கடந்த மூன்றுண்டுகளாகக் கல்லூரித் தினம் களைகட்ட முடியவில்லை. நாடறிந்த நமது நாடகப் போட்டிகளையும் நடத்தமுடியவில்லை. கோலாகலமான கொண்டாட்டங்களைத் தவிர்க்க வேண்டி 'சூழ்நிலை' காரணமாக இம்முறையும் பந்தல்கள் படாடோபமற்ற முறையிலேதான் யூலாய் ஃபோர்த்தைக் கொண்டாட வேண்டியிருந்தது. ஆடம்பரமின்றி நடந்தாலும் மாணவர் மாணவரேதான். இல்லப்பற்று என்ற அடிப்படையில் எழுந்து போட்டிகளால் உந்தப்பெற்ற அவர்களது உற்சாகத்தைக் கட்டுப்படுத்த முடியுமா...?''

''ஏற்கனவே நடந்த போட்டிகளில் ஈட்டிக்கொண்ட புள்ளிகளைப் பொன்போலப்போற்றி மேலும் புள்ளிகளைச் சேர்த்து, எமது இல்லமே கல்லூரிக் கொடியை வென்றிடவேண்டும்'' இது ஒவ்வொரு இல்ல மாணவனினதும் இலட்சியக் கனவு! 'எந்த இல்லத்திற்கு இது நனவாகுமோ..?

இந்த வினவுடன் பிறந்தது யூலைத்திங்கள் நான்காம் நாள்.

இல்ல மாணவர் கண்கள் அறிவிப்புப் பலகையை ஒருகணம் நோட்டம்விட்டன. சம்பந்தர் இல்லம் 25 புள்ளிகள்; சுந்தரர் இல்லம் 19 புள்ளிகள், வாகீசர் இல்லம் 13 புள்ளிகள்: மாணிக்கர் இல்லம் 3 புள்ளிகள். ஏற்கெனவே நடைபெற்ற கிரிக்கற், உதைபந்தாட்டம் போன்றனவற்றிலும் பேச்சுப் போட்டி, சங்கீதப் போட்டி போன்றனவற்றிலும் ஒவ்வோர் இல்லமும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் இவை. இத்துடன் விளையாட்டுப் போட்டியில் இல்லங்களின் நிலைகளுக்குரிய புள்ளிகள் சேர்க்கப்படும்பட்சத்தில் கல்லூரிக் கொடியைச்சுவீகரிக்கும் இல்லம் எது எனத் தெரிந்துவிடும்.

இத்தகைய ஆர்வத் துடிப்புடன் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகியது. (காலை ஒன்பது மணியளவில்) கடந்த வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தைச் சூழவரத் தத்தம் இல்லங்களில் குழுமியிருந்த மாணவர்கள் மரியாதை தெரிவிக்குமுகமாக எழுந்து நிற்க கல்லூரி அதிபர் கல்லூரிக் கொடியை ஏற்றிவைக்க மங்கல நிகழ்ச்சியுடன் அன்றைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. காட்சிப்பாங்கான போட்டியாக முதலில் இடம்பெற்ற சட்டி எறிதல் நிகழ்ச்சியில் பழைய மாணவரும்பங்குபற்றி எமது விழாவைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்து மிக ஒழுங்கானமுறையில்இடம்பெறறநிகழ்ச்சிகளில் நாலு இல்ல மாணவர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்று சொல்வது போல் மாறி மாறி வெற்றியீட்டினர் இறுதி நிகழ்ச்சியான அஞ்சலோட்டம், இல்ல மாணவரை உற்சாகத்தின் எல்லைக்கே இட்டுச் சென்றது. ஏனிந்த மகிழ்ச்சிஆரவாரம் ? ஆம், இறுதி முடிவு அறிவிக்கப்படுகிறது! சம்பந்தர் இல்லம் மிகப் பெரும்பான்மையான புள்ளிகளால் முதலாமிடத்தைத் தட்டிக் கொண்டுவிட்டது. வாகீசர் இல்லம் இரண்டாம் இடத்தையும், சுந்தரர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன. அனைத்துத் துறைகளிலும் அதிகமான புள்ளிகளைப் பெறும் இல்லமே கல்லூரிக் கொடியைச் சுவீகரித்துக் கொள்ளும் இதுவே முடிவான பெரு வெற்றியாகக் கொண்டாடப்படும் இதன்படி, இம்முறை சம்பந்தர் இல்லம் கல்லூரிக் கொடியைச் சுவீகரித்துக் கொண்டது.

அடுத்துப் பரிசளிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. மாணவர் மிக அமைதியாகக் கல்லூரி மண்டபத்தில் குழுமியிருந்தனர். அதிபரின் பரிசளிப்பு விழா உரையை அடுத்து, விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் திரு. சொர்ணலிங்கம்

(12ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

கடந்த ஞாயிறு வாரமலரில் செம்பியன் செல்வன் அவர்கள் 'மௌனி என்றொரு எழுத்து இயக்கம்' என்ற தலைப்பில் மௌனி பற்றி மேலோட்டமாக ஓர்அறிமுகக் கட்டுரை எழுதியிருந்தார். 'மௌனியை அவசரமாகப் புதிய வாசகர்கள் இனங்காண இக்கதை நிச்சயம்உதவும்' எனத் தெரிவித்து, அவரது சிறுகதைகளில் அளவில் மிகவும் சிறிதான 'ஏன்' என்ற கதையை அவர் அனுப்பி உதவியுள்ளார்.

# எமது சிறுகதை

## ஏன்

★ மௌனி

சுசீலா வக்கீல் ராஜமய்யரின் மூத்த பெண். அவள் சிறு வயதிலிருந்தே அதிக வசீகரத் தோற்றமுடையவளென்று பிரசித்தம். சற்று மாநிறமாயினும், அவள் இரு விழிகளும் அதிகக் கருமையாகவும், புருவங்கள் செவ்வனே வளைந்து மிகக் கறுப்போடியனவாகவும் இருந்தன. ''ஏன், ஏன்?'' என்ற கேள்விகளை அவள் கண்கள் சதா கேட்பவை போன்று தோன்றும். அதற்குச் சாதகமாக அவள் புருவங்கள்வளைந்து சிற்சில சமயம் கண்களுக்கு மேலே பாதி சுழித்துக் கொள்ளும் அப்போது அவளைப் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமும் அமைதி இன்மையும் ஏற்படும்.

அவளுக்குப் பதினைந்து வயது ஆகும்போது, அவளுடைய பார்வையின் ஒளி கொஞ்சம் குறைவுற்றது. பளீரென்று மின்னல்போன்று தாக்காமல், வசீகரச் சோர்வுற்று அவள் கண்கள் வருத்தமுற்றகேள்விக் குறியாகத் தோன்றின. பழையபடியே பள்ளிக்கூடத்திற்குச் சென்று வந்தாள் அப்போது அவள் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள்.

அவள் வீட்டிற்கு எதிர் வீட்டில் மாதவன் இருந்தான். மாதவன் மிராசுதார் கிருஷ்ணய்யரின் ஒரே புதல்வன். அவன் நல்ல சிவப்பு நிறமும், அழகிய தோற்றமும் உள்ளவன். அவன் முகத்தில் சதா ஆனந்தமும் சுறுசுறுப்பும் குடிகொண்டிருக்கும். அவனும் சுசீலா படித்துவந்த பள்ளிக்கூடத்திலேயே அப்போது பத்தாவது வகுப்பில் படித்து வந்தான். சுசீலாவை அவன் சிறு வயதிலிருந்தேபார்த்திருந்தும், அவளோடு பேசியது கிடையாது. தன் வீட்டு மாடியில் சில வேளையில் அவன் உலாவும் போது சுசீலாவை அவள் வீட்டுத் திண்ணையில் நிற்கப் பார்த்தது உண்டு.

ஒரு நாள் மாதவன் பள்ளி விட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தான். பாதிவழியில் வீடு போய்க்கொண்டிருந்த சுசீலாவைக் கண்டான். அவள் அருகில் நெருங்க நெருங்கத் தான் அவளுக்கு வெகு தூரத்தில் இருப்பதாக எண்ணம் ஏற்பட்டது அவனுக்கு. அவள் பின்புறத்திலேயே சற்றுத்தள்ளி வந்து கொண்டிருந்தான். ''சுசீலா நானும் வீட்டிற்குத்தானே போகிறேன். இருவரும் சேர்ந்து போகலாமே!'' என்று திடீரென்று கேட்டான். அவள் திடுக்கிட்டுப் பின்புறம் திரும்பிப்பார்த்தாள். அவள் புருவங்கள் சற்று உயர்ந்து கண்களும் சிறிது பெரிதாகி ஏன், எதற்கு?'' என்று வியப்போடு கேட்பது போல் தோன்றின. மாதவன் தன் மனக்கட்டுப்பாட்டை இழந்தவன் போன்று ''சுசீ நான் உன்னை மறக்கமாட்டேன். நீயும் என்னை மறக்காமல் இருக்கிறாயா?'' என்று பொருத்தமில்லாமலே கேட்டான். ''என்ன, ஏன்?'' என்று அவள் அவனைக் கேட்டது தான் அவனுக்குத் தெரிந்தது. சிறிது ஆனந்தம் அவன் மனத்தில் தோன்றி மறைந்தது. மாதவன் ''ஏன், எதற்கு?'' என்ற கேள்விகள் கேட்டுப் பழக்கப்படாதவன். ஆயினும் அன்று அவள் வாயினின்றும் வந்த அச்சொல்லினால் ''ஏன், அவள் என்னிடம் இப்படி இருக்கிறாள்'' என்று எண்ணலானான். வேறு பேச்சில்லாமலே இருவரும் தத்தம் வீடு போய்ச்சேர்ந்தார்கள். வீடு சேர்ந்ததும் மாதவன் வழியில் நடந்தவைகளை மறந்தவன் போலானான். பந்தடி மேடையிலிருந்து அவன் விளையாடி விட்டு இரவு வீடு வந்ததும் பழைய மாதவனே போன்று தான், சாயங்காலம் நடந்த சம்பவம் அர்த்தமற்ற ஒரு நிகழ்ச்சி என்று தான் அவன் மனத்தில் பட்டது.

சுசீலாவிற்குக் கலியாணம் நிச்சயமாகி அந்த வருஷம் கோடைக்கால விடுமுறைக்குள்ளே நடந்தது. கலியாணம் நடக்கும் போது மாதவன் ஊரிலில்லை. விடுமுறைக்காகத் தன் மாமன் கிராமம் சென்றிருந்தான் அவளுக்குக்கலியாணமான விஷயமும் அவனுக்குத் தெரியாது.

அந்த வருஷம் அவன் பரீட்சையில் தேறிவிட்டான். கலாசாலைப்படிப்பிற்காக அவன் மறுவருஷம் பட்டணம் போய்விட்டான். அடிக்கடி மாதவன் ஊருக்கு வருவதும் இல்லை. சுசீலாவைப்பற்றிய எண்ணமே அவனுக்கு இல்லை. அவளை மறந்தவன் போன்றே ஆனான். அந்த வருஷம் கோடை விடுமுறைக்கு ஊருக்கு வந்தபோது சுசீலா புக்ககம் சென்றிருந்தாள். அவன் தன் வீட்டுமாடியில் மேலும் கீழும் உலாவும் போது சிலசில சமயத்தில் ராஜமய்யரின் வீட்டுத் திண்ணையைப் பார்ப்பான். அங்கு சுசீலாவைப்பார்க்க முடியாததும் அவன் மூளையில் படவில்லை. அதுவும் அர்த்தமில்லாமலும் ஏன்என்று தெரியாமலும் பார்ப்பது தான்.

மற்றும் இரண்டு வருஷங்கள் சாதாரணமாகவே கழிந்தன. மாதவன் படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் இருந்தது. விடுமுறைக்காக அவன் ஊர் வந்திருந்த அந்தச் சமயம் சுசீலாவும் தன் தகப்பனார் வீட்டிலிருந்தாள். அப்போது அவளுக்கு ஒருவயதுக் குழந்தை ஒன்று இருந்தது.

ஒருநாள் மத்தியானம் மாதவன் தன் வீட்டின் மாடியில் நின்று கொண்டு இருக்கும் போது எதேச்சையாக ராஜமய்யரின் வீட்டுத் திண்ணைப் பக்கம் பார்த்தான். அச்சமயம் சுசீலா தன் அழும் குழந்தைக்கு. தெருவில் போகும் வண்டியை விளையாட்டுக் காட்டிக்கொண்டு இருந்தாள். அவளையே பார்த்துக்கொண்டு மாதவன் கற்சிலை போன்று நின்று இருந்தான். ஏன் என்ற கேள்வி எழுந்துவிட்டால் ஒருவன் மூளையை இழந்தவன் போலாகிவிடுகிறான். சிறிது நேரம் சென்றவுடன் சுசீலா அவன் நிற்கும் மாடிப் பக்கம் பார்த்தாள். அவனை நான்கு வருஷங்களுக்குப் பிறகு அப்பொழுதுதான் அவள்பார்க்கிறாள். அப்பொழுது அவனிடம் தோன்றிய மாறுதல் அவள் மனத்தில் படாமல்இருக்கமுடியாது. ஆனால் அவள் முகத்தில் அவ்வகை மாறுதல் ஏன் என்று மட்டும் அவனுக்குத் தெரியவில்லை.

மாதவனுக்கு அவள் கண்கள் பழையபடியே கேள்விக் குறிகளாகத் தோன்றின. சிறிது நேரம் கழித்து சுசீலா வீட்டினுள் சென்று மறைந்து விட்டாள். மாதவன் தான் பாதி படித்துவிட்டுப் பிரித்தபடியே விட்டிருந்த புத்தகத்தினிடம் செல்லவில்லை. திடீரென்று ஏன் என்ற கேள்வி அவன் மனத்திடையேஎழுந்துவிட்டது சந்தோஷக் களையையும் அவன் முகத்தினின்று இழந்தான். மனநிம்மதியும் அதே கணத்தில் அவனை விட்டு அகன்றது.

அவள் பார்வையின் தத்துவத்தை அவன் அறிந்துகொண்டான் போலும். திடீரென்று ஏற்பட்ட சிந்தனை மாறுதலால் அவன் சந்தோஷத்தையும் மனநிம்மதியையும் இழந்தான் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. அவள் பார்வையின் கேள்விக்குறி அவனைத் தாக்கி, அதற்குத் தன் மனத்தில் தனக்குச் சாதகமாக அவித்துக் கொண்ட விடையும், மறுபடியும் மற்றொரு கேள்வியின் ஆரம்பம் தானே?

அதுமுதல் அவன் ஒடுங்கலுற்றான். தேகமும் மிக மெலிந்து இளைக்கலுற்றது. எல்லாவற்றையும் பற்றி யோசிக்கலானான். அவன் யோசனைகளெல்லாம் ஆரம்பித்த இடமான சுசீலா இடத்திலே முடிவடைந்து முற்றிலும் முடியாமல், திரும்பவும் ஆரம்பிப்பது போன்று சலிக்க ஆரம்பித்தன. கலாசாலைதிறக்க இன்னும் பத்து நாட்களே இருந்தன. ஆனால் சுசீலாவைப் புக்ககத்திற்குக் கொண்டு போய் விடவேண்டியநாள் வர பதின் மூன்று தினங்கள் இருந்தன.

இரண்டொரு நாளில் மாதவனுக்குச் சுரம் கண்டது. அச்சுரம் வரவர அதிகமாகி மூளையைப்பற்றின கடுஞ்சுரமாக மாறியது. சொந்தப் பிரக்ஞையுடன் இருக்கும்போது 'ஏன் ஏன்?' என்றுமனதில்கேட்டுக் கேட்டு ச்சுளைப்படைந்து பிரக்ஞையை இழக்கும்போது சோர்வுற்றுச் சற்றுத் தூங்குவான்.

அப்போது அவன் தன்னையறியாமல்பிதற்றுவான் ஆனால் அவனையும் சுசீலாவையும் பிடித்த நல்லகாலம் அவன் பிதற்றல் பட்டணத்தையும் அவன் படிப்பையும் பற்றியதாகவே இருந்தது

அவன் கலாசாலை திறக்கும் தினத்துக்கு முதல் நாள் காலையில் எவ்வகை சிகிச்சையும் பயன்படாது இறந்து போனான். சாதாரணமாக இருப்பின் அவன் அன்று பட்டணம் கிளம்பிப்போக வேண்டியவன். அவன் இறக்கும் போது தன் ஜீவியத்தை வெறுக்கும் கசப்பின் வேகத்தைச்சற்று உறுதியுடன் எதிர்பார்ப்பவன் போன்று ''மூட்டைகளைக்கட்டு இன்று பட்டணத்துக்குப் புறப்படவேண்டும்'' என்று சொல்லித்தான் இறந்தான். அவன் இறந்த பிறகு அவன் பெற்றோர் எவ்வளவோ வாய்விட்டு அலறினார்கள். ஆனால்அவர்களுக்கு மன ஆறுதல் ஏற்படாதென்று தான் தோன்றியது.

சுசீலா அவன் பிரேதம் சுடுகாட்டிற்குக்கொண்டு போகப் பட்டபோது வீட்டுத்திண்ணையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். மாதவனுடைய பெற்றோர் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற வார்த்தைகளால் ஓலமிட்டது அவளுக்கு வியப்பையே கொடுத்தது. அவள் கண்களும் புருவங்களும் எப்போதையும் போல 'ஏன்' என்பது போலச்சுழித்தன.

அவள் கண்களின் தோற்றம் தன் ஆட்சியை மீறி பழக்கத்தின் காரணமாகவே மனத்தில் தோன்றியதைவிட்டு வேறு எதையோ குறிப்பது போலத்தான்அப்போதும் இருந்தது.கண்களினின்றும்கன்னம் வழியாக ஓடி முத்துப்போன்று கீழே விழுந்து சிதைவுற்றுப் போன ஒரு சொட்டுக்கண்ணீரும் 'ஏன்' என்ற கேள்விக்கும் அகப்படாமலே தான் கீழே சொட்டின.

உள்ளே இருந்து ''சுசீ'' என்று அவள் தாயார் கூப்பிட்டபோதும் 'ஏன்' என்று தெரியாமலேதான் உள்ளே சென்றாள்.

பட்டணத்தில் உயர்தரக் கல்லூரி திறந்து ஒருமாதம் ஆகிவிட்டது. மாதவனது மரணத்தைப்பற்றி அறியாத அவன் சிநேகிதர்கள் அவன் ஒரு மாதம் வரையிலும் வராததைப்பற்றி ஆச்சரியம் அடைந்தனர். இவ்வளவு மேன்மையான புத்தியை உடைய மாதவன்ஏன்படிப்பை நிறுத்திவிட்டான் என்று கேட்டும் ஒன்றும் புரியாமலும் தெரியாமலும் திகைத்தனர்.

சுசீலாவும் புக்ககம் சென்று கிட்டத்தட்ட ஒருமாதம் ஆகப் போகிறது. இப்போது ஊரிலிருந்து வந்தது முதல் அவள் கண்கள் என்றுமில்லாத ஒரு மகத்தான சோகம் கலந்த வசீகரத்தோற்ற முடையவையாக ஏன் தோன்றுகின்றன என்று அறிய முடியாமலே அவளைப் பார்க்கின்றான்.

(12-ம் பக்கம் பார்க்க)

# ஞானம்!

நாற்பது வயதிலே
ஞானம் வரும் என
இருபது வயதிலே
எண்ணியிருந்தேன்!

பார்ப்பதும், திரும்பிப்
பார்ப்பதும், திருப்பிப்
பார்ப்பதும், வேர்ப்பதும்
நினைவில் சேர்ப்பதும்......
இருபது வயதின்
இச்சைகள் என்றே
இருபது வயதில்
எண்ணியிருந்தேன்!

ஒரு புது ஆசைகள்—
பருவப் பாசைகள்!
தருவது வாலிபம்
கருவது வயோதிபம்
திரைக்கும் என்னுடல்
நரைக்கும் என்மயிர்
வெளுத்த தலை எனும்
வெள்ளரசின் கீழ்ப்
'பழுத்த' ஞானம்
பிறக்கும் என்றே
இருபது வயதில்
எண்ணியிருந்தேன்!
இருபதின் மேலும்
ஒருபது சென்றது
......................

இன்னொரு பத்தும்
பின்னர் சென்றது
இன்னும் ஆசைகள்
தீர்ந்த பாடில்லையே!

இருபதின் மேலே
இருபது சென்றபின்
வருவது 'ஒரு புது
இருபதாச' மனமே!
...............

திரும்பிப் பார்ப்பது
தீர்ந்த தென்றாலும்
விரும்பிப் பார்ப்பதோ
விட்ட பாடில்லையே!

கரும்புப் பார்வைகள்......
அரும்புப் புன்னகை......
திரும்பத் திருப்ப......
நிரம்பவில்லையே......!

வாலிபம் என்கிற
காலை கழிந்து
நாலு மணிப் பொழுது
ஆன பின்னரும்......
நாலு நரைமயிர்
நாக்கை நீட்டினும்......
பிடுங்கத் துடிக்கும்
பேய் மனமே! நீ
அடங்கிட எத்தனை
ஆண்டுகள் ஆகுமோ......?
நாலு நரை மயிர்
மேலும் ஒரு மயிர்
நரைத்து...... என்வயதை
உரைத்திடில் என்ன?

— சத்தியசீலன்

## இராஜராஜசோழப் பேரரசன் -5

# கண்டராதித்தரும் கடவுட்பணியும்

**க.சி.குலரத்தினம்**

விஜயாலயசோழன் மைந்தன் ஆதித்தசோழனுக்குப் பராந்தகன் என்றும் கன்னரதேவன் என்றும் இருமைந்தர் இருந்தனர். பராந்தகன் 907 முதல் 953 வரை அரசாண்டவன். அவன் தம்பி கன்னரதேவன் பெயரில் ஒரு கல்வெட்டு புதுச்சேரியில் பாகூர் என்னும் இடத்தில் கண்டுள்ளார்கள்.

பராந்தகனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என்னும் மைந்தர் மூவர் இருந்தனர். அரிஞ்சயனை அரிந்தமன் எனவும் வழங்கினர். மூத்தமைந்தன் இராசாதித்தன் இளவரசனாக முடிசூடி அரச காரியங்களில் உதவியாய் இருந்தவன். இரண்டாம் மைந்தனை கண்டராதித்தன் என்பார் பெரிய சிவபக்தர். கண்டன் என்பதும் ஆதித்தன் என்பதும் சோழர்குலப் பெயர்கள். கண்டராதித்தர் இளமையிலேயே இறைவனிடம் பற்றுள்ளங்கொண்டவராய்த் தில்லைப்பெருமானிடம் தம்மை ஒப்படைத்ததோடு, தந்தையார் பராந்தகன் செய்துவந்த சிவப்பணிகளை மேற்பார்வை செய்து வந்தவர்.

இளவரசன் இராசாதித்தன் போர்முனைகள் கண்டு பெருமை பெற்றவீரன். அவன் ஒருமுறை தக்கோலம் என்னும் இடத்தில் பகைவர்களோடு கடும் போர் செய்து நின்றபோது வீரமரணம் அடைந்தான். அதனால் கண்டராதித்தர் தில்லையிலிருந்து தஞ்சைக்குச்சென்று இளவரசரானார். கண்டராதித்தர் 900ஆம் ஆண்டில் தோன்றியவராதல் வேண்டும். அவர் 950இல் இளவரசராய் முடிசூடி அரச காரியங்கள் பார்த்தவேளையில் தஞ்சையில் உடலும் தில்லையில் உயிருமாக வாழ்ந்தவர். அவரின் சைவப் பணிக்கு உறுதுணையாக வந்து வாய்த்த முதல் மனைவியார் வீரநாராயணி என்பவராவர். அவர் இறந்ததும் கண்டராதித்தர் செம்பியன் மாதேவியார் என்னும்பெருமாட்டியை மணந்து கொண்டார். முதல் மனைவியாரின் நினைவாக ஓர் ஏரி கட்டப் பெற்றிருந்தது என்பர்.

இரண்டாம் மனைவியார் செம்பியன்மாதேவியார் மழவரையன் மகளாவர். இவ்வுத்தமி 920 ஆம் ஆண்டளவில் தோன்றி எண்பதாண்டுகள் வரையில் வாழ்ந்து 1001ஆம் ஆண்டில் மறைந்தவர். இவர் இளமையிலேயே சிவபக்தையாய்த் திருக்கோயில்களுக்கு அள்ளிக் கொடுத்த செங்கையினராவர், அன்றித் தம் நீண்டகால வாழ்வில் சோழகுல மன்னர்கள் பலரைத் தூக்கி வளர்த்துச் சைவப் பற்றுத்ததும்ப உருவாக்கிவிட்டவர்.

கண்டராதித்தர் இளவரசராயிருந்த காலத்தில் 953ஆம் ஆண்டில் தந்தை பராந்தகன் இறந்ததும், இராசகேசரி கண்டராதித்தசோழன் என்னும் திருநாமத்தோடு அரசனானார். இவர் நாலகாண்டுகள் வரை அரசாண்டார் என அறியக் கிடக்கிறது இவரின் ஈர நெஞ்சின் வீரத்தைப் பற்றி எவரும் எங்காயினும் விரிவாக எழுதக்காணோம். அமைதியையும் சமாதானத்தையும் பெரிதும் விரும்பிய இவரைக் கல்வெட்டுக்கள் சில இடங்களிற் போற்றுகின்றன. "ஸ்வஸ்திஸ்ரீ மதுரைகொண்ட கோ இராசகேசரி பன்மற்கு..." எனத் தொடங்குவது ஒருகல்வெட்டு. இஃது ஒருவேளை பாண்டியர் தங்கள் சுதந்திரத்துக்காகக் கலகஞ்செய்தவேளையில் இவர் படை மதுரைவரைசென்றுவந்த திருந்தனைக்குறிப்பதாகலாம். இவருக்கு மும்முடிச்சோழர் என்னும் விருதுப்பெயரும் வழங்கி வந்துள்ளது.

கண்டராதித்தருக்கு வரப் பிரசாதமாய் வந்து வாய்த்த மனைவி நல்லாள் செம்பியன் மாதேவியாரை இவர் 935ஆம் ஆண்டளவில் திருமணஞ்செய்திருக்கலாம். இவ்விரு பெருமக்கள் சேர்க்கையால்சைவப்பணி மிகவும் பரந்தஅளவில் பல்கிப் பெருகியது. இவர்களின் அயரா உழைப்பினாலேதான் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு வளம் பொங்கியது என்று துணிந்து கூறலாம்.

கண்டராதித்தர் தமது இளமைக் காலத்தில் தில்லையில் வாழ்ந்து தந்தையாரின் சிவப்பணியை மேற்பார்வைசெய்து வந்த காலத்தில் சிவபக்தர்களான திருமாளிகைத்தேவர், சேந்தனார், வேணாட்டடிகள், திருவாலியமுதனார் முதலானோருடன் நெருங்கிப்பழகியிருந்தார். அவர்கள் கூட்டத்தில் தாமும் ஒருவராய் இருக்கும் பெரும்பேற்றையும் பெரிதும் விரும்பியிருந்திருப்பார்.

கண்டராதித்தரின் சிவபக்தி, சிவப்பணி, சிவஞானமுதிர்ச்சி என்பன காரணமாக அவரைப் பெரியவர்கள் சிவஞானகண்டராதித்தர் எனஆராமையோடு வழங்கினர். இதனைஉள்ளிட்டே அவர் தம்மைச் "சோழவேந்தன் தஞ்சையர்கோன் கண்டராதித்தன்" என வழங்கினர்.

கண்டராதித்தர் அந்தணர்களுக்குத் திருப்தியூட்டி உபகரித்தவர். உபகரித்து உபசரிப்பதில் உள்ளம் நிறைந்த மகிழ்ச்சிகண்டவர். அவர் பிராமணரைக் குடியேற்றிய மாதிரிக் கிராமம் அவர் பெயரால் "கண்டராதித்த சதுர்வேதி மங்கலம்" என வழங்கியது. அது திருமழபாடித் தலத்துக்கு அருகில் அமைந்தது. இன்னும் தண்ணீர் வளமில்லாத வறண்ட பிரதேசமொன்றில் பெரியஏரி தோண்டி நீர்நிறைந்தஅதற்கு. "கண்டராதித்தப் பேரேரி" எனப்பெயரிட்டார். தாம் குடியேற்றிய பிராமணரின் விருப்பத்தை அறிந்து அந்த மாதிரிக் கிராமத்தில் திருமால் கோயில் அமைத்துக் கொடுத்தார்.

கண்டராதித்தர் காலத்தில் ஒதுக்குப் புறங்களில் வாழ்ந்த சமணரின் வேண்டுகோளுக்கிசைய அவர் தென்னார்க்காடு என்னும்பிரதேசத்தில் பள்ளிச்சந்தல் என்னும் இடத்தில், பெரிய பள்ளி அமைத்துக் கொடுத்தார். அது "கண்டராதித்தப் பெரும்பள்ளி" என வழங்கிச் சமணருக்கு வாழ்வளித்தது

இவ்வாறெல்லாம் குடிமக்களுக்கு வாழ்வளித்த வள்ளற்பெருமானாகிய கண்டராதித்தர் அல்லும் பகலும் தில்லைப் பதியில் ஆனந்தக் கூத்தாடும் மின்னார் உருவனை நினைந்து உருகிவந்தார். முன்னர் தாம் தில்லையில் உடனுறைந்து பருகிய அருளாரமுதத்தை மீண்டும் பருகுவது எப்போது என்று இரங்கி ஏங்கித் துதித்துப் பாடுவாராயினர். அவர் பாடிய பாடல்கள் திருவிசைப்பாத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

தில்லைப் பெருமானைக் காணும் வேட்கை மிகுதியை எடுத்தோதும் இப்பதிகம் பத்துப்பாடல்கள் கொண்டமைந்தது. மின்னார் உருவம் மேல் விளங்க எனத் தொடங்கும் பதிகத்தில் பாடல்கள் தோறும் இறைவனைக் காணும் நாள் எந்நாளோ என ஏங்குவார். "என்னாரமுதை எங்கள் கோவை என்று கொல் எய்துவதே" என்றும், கோவே உன்றன் கூத்துக் காணக் கூடுவதென்று கொலோ" என்றும், "அத்தா உன்றன் ஆடல்காணக் கணைவதும் என்று கொலோ" என்றும், "கோனை ஞானக் கொழுந்து தன்னைக் கூடுவதென்று கொலோ" என்றும், இவ்வாறே கூறுவதும், காண்பதும், எய்துவதும் என்று கொலோ என்றெல்லாம் பதிகம் பாடியருளிய தம் பெயரையும் இறுதிப் பாடலில் குறிப்பிடுவர்.

"சீரான்மல்கு தில்லைச்
செம்பொன்
அம்பலத் தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி
வேந்தன்
தஞ்சையர் கோன் கலந்த
ஆரா இன்சொற் கண்ட
ராதித்தன்
அருந்தமிழ் மாலை வல்லார்
பேரா உலகில் பெருமை
யோடும்
பேரின்பம் எய்துவரே."

(12-ம் பக்கம் பார்க்க)

---

★ 'பாரதியின் பன்முகப்பார்வை' நூல் பற்றிய ஒரு கண்ணோட்டம்

# பாரதியின் பன்முகப்பார்வையும் பாரதி பற்றிய பன்முகப்பார்வையும்

● மயிலங்கூடலூர் பி. நடராசன்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

பாரதியின் பன்முகப் பார்வையில் இடம்பெற்றுள்ள கட்டுரையாளர்கள் பல் துறையினர். முருகையன் (கால மாற்றங்களுடன் பாரதியும்) கல்வி நிர்வாகத் துறையினர்; செந்திவேல் (தேசிய இயக்க நெறிகளும் பாரதியும்] அரசியல் தலைவர்; ஜெயரத்தினம் (பொருளியற் சிந்தனைகளும் பாரதியும்) அரசஆட்சித்துறையாளர், சித்திரலேகா (பாரதியும் பெண் விடுதலையும்). தில்லைநாதன் (பாரதியும் இலங்கையும்) ஆகியோர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர், நுஃமான் [நவீனத்துவமும் பாரதியும்] பல்கலைக்கழக மொழி, பண்பாட்டுத்துறையினர், மௌனகுரு [கலைகளும் பாரதியும்] பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர், சின்னத்தம்பி [வர்க்கங்களும் பாரதியும்], ரவீந்திரன் [அரசியல் இலக்கியமும் பாரதியும்] ஆகியோர் கல்லூரி ஆசிரியர்கள், சிவ. இராஜேந்திரன் [கல்வியற் சிந்தனைகளும் பாரதியும்] பல்கலைக்கழக மாணவர், இவ் வேறுபாடுகளும் பிற தனியாள் மாறல்களும் கட்டுரைகளின் பன்முகப்பார்வைக்குக் காரணமாகும்.

### கட்டுரைகளின் பகுப்பு

இந்நூலிலுள்ள கட்டுரைகளைப் படித்து முடித்தபோது அவற்றை இரு பிரிவுகளுள் அடக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. முதலாவது வகைக் கட்டுரைகளில் பாரதியின் சிந்தனைகள் தொகுத்தும் வகுத்தும் தரப்பட்டுள்ளன. இரண்டாவது வகைக் கட்டுரைகளில் அரசியல், இலக்கிய, சமூகவியல் கோட்பாடுகளுக்குப் பாரதியின் இலக்கியம் சான்றாகக் காட்டப்பட்டுள்ளது. முதலாவது வகைக்குமுருகையனின் கட்டுரையையும் இரண்டாவது வகைக்கு சின்னத்தம்பியின் கட்டுரையையும் வகை மாதிரிகளாகக் கொள்ளலாம். வாசகர்களே கட்டுரைகளை இனங்கண்டு கொள்ளமுடியும்.

### பாரதியை உருவாக்கிய பின்னணி

பாரதியை எந்த அடிப்படையில் மதிப்பீடு செய்வது? இவ் வினாவுக்கு ப. ஜீவானந்தத்தின் விடையை முன்னர் கண்டோம். அதே கருத்தை இந் நூலில் செந்திவேல் பின்வருமாறு வலியுறுத்துகிறார். "பாரதி வாழ்ந்த சூழ்நிலையில் வைத்து பாரதியின் நிலைப்பாட்டைக் கணித்துக் கொள்ள" வேண்டும் [பாரதி பன்முகப்பார்வை பக்கம் 23. [32சி ஆகும்] இதே கருத்தை ரவீந்திரனும் வலியுறுத்துகிறார். [பக்கம் 80] பாரதி ஆய்வுகளில் முரண்படும் பன்முகப் பார்வையும் தோன்ற ஆய்வாளர்கள் பாரதியைத் தமது சமகால நிலையில் வைத்து மதிப்பிட முனைவதே காரணமாகும். இக் குறைபாட்டை இந்நூலிலும் ஆங்காங்கே காணலாம்.

பாரதியை ரூஷிய ஒக்டோபர் புரட்சியின் குழந்தை என்று சிலரும் பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை என்று சிலரும் கூறுவர். இக்கருத்துக்கள் இந் நூலிலும் உள்ளன. இக்கருத்துக்கள் உண்மையே எனினும் முழு உண்மைகள் அல்ல என்பதை அனைவரும் அறிவர். எனினும் உலகில் எங்கு மக்கள் எழுச்சி நிகழ்ந்தாலும் பாரதி அதனை வரவேற்றுப் பாடியுள்ளான் என்பதே முழு உண்மையாகும். இந்த உண்மையும் இந் நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும் "அக்காலத்தில் பாரதியின் இலட்சிய தேசமாக விளங்கிய ரஷ்யா" [பக். 59] என்ற கூற்று ஆய்வு நிலைப் பட்டதாகத் தோன்றவில்லை. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்தவன் பாரதி" [தி. க. சிவசங்கரன் தீக்கதிர் பாரதிமலர் பக் 20] என்ற கூற்றின் குறை நிரப்பியாகவே இதனைக் கொள்ளலாம்.

### பாரதியின் சமய நோக்கு

பாரதியின் சிந்தனைகளின் அடிப்படை பாரதப் பண்பாடே பாரதி அடிப்படையில் ஒரு சமயக் கவிஞனே இக் கருத்தை ஒட்டியும் வெட்டியும் இந்நூலில் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. "பாரதி விவேகானந்தர் வழி வந்த வேதாந்தி என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது" என்கிறார். செந்திவேல் [பக். 27] பாரதியை வேதாந்தச் சிமிழுள் அடைக்க முயல்வதாகப் பலர் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். "பாரதி கவிதைகளில் தெரிந்தோ தெரியாமலோ தெய்வ நீதியை அதிகம் வற்புறுத்துவதால் அடிமைத்துவம் தொடர்ந்து நிலைக்கக் குரல் கொடுப்போர்க்கும் உதவி செய்கிறான் என்பதும் கவனிக்கத்தக்கதே" என்று பாரதியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார் சின்னத்தம்பி [பக். 76].

"கிரேக்க இயற்கை வழிபாட்டு மதமான ஹெலனிக் வழிபாட்டை மேற்கொண்டவன் போல காற்றையும் நிலவையும் சூரியனையும் தீயையும் வணங்குவதாகப் பாடுகிறான்" என்று கூறுகிறார் சின்னத்தம்பி [பக் 76]. ஆனால், இங்கு பாரதி கூறுவன எல்லாம் வேதப்பாடல்களே என்பதை இந்து நாகரிக மாணவர் அறிவர். பாரதி ஆய்வுக்கு ஏனைய அறிவுகளோடு இந்துசமயத் திருநூல்களின் அறிவும் வேண்டுமென்று ரூசிய அறிஞர்கள் [மகாகவி பாரதி பற்றி] சோவியத் அறிஞர்கள் என். சி. பி. எச். 1982] கூறியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

(12-ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் எப்படி?

வாரபலன்: மாதம் - ஆடி- திகதி - 6 (1985-7-21)

ஞாயிறு திதி - சதுர்த்தி பின் இரவு வரை

நக்ஷத்திரம் - மகம் மூற் பகல் வரை

## மேடம்

பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தொழிலில் புது வரவிற்கு இடமுண்டு. எக்காரியம் ஆயினும் சிந்தித்துச் செயல்படவும்.

## இடபம்

துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. இடமாற்றத்துக்கான ஆலோசனை உருவாகும் இவ்வாரம் சுபகாரியங்கள் மேற்கொள்ள நன்று.

## மிதுனம்

வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். பயன்தரக் கூடிய உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படலாம். வாழ்க்கையில் வசந்தம் வீசும். மூத்த சகோதரர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம்.

## கடகம்

நத்தை வேகத்தில் காரியங்கள் நகரும். வாய்வுக்கோளாறு இருக்கும். வியாபாரிகள் நஷ்டமடைவர். புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

## சிங்கம்

ஆணவப் போக்கினால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர். பணிவு வெற்றியைத் தரும் நூதன ரோகத்திற்கும் இடமுண்டு.

## கன்னி

ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான வாரம். இனபந்துக்கள் கொண்டாட்டம் இடம் பெறும். அவசர அழைப்புகள் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இவ்வாரம் எதிர்பாராத வரவுக்கும் இடம் உண்டாம்.

## துலாம்

பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள். வெளியிடத்துத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும். சகோதரர் ஒருவருடைய உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

## விருச்சிகம்

அறிவுப் பணியில் ஆர்வம் பிறக்கும். சாரதிகள் பயனடைவர். தாய்வழி ஆதரவு அவசியம் கிடைக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம். உற்சாகமான வாரம்.

## தனுசு

எதிர்பார்த்த பொருள் வரவும்பூமியால்லாபமுமுண்டு. புத்திரவழியாலும் நன்மையுண்டு. சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும். குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும். மகிழ்ச்சிகரமான வாரம்.

## மகரம்

சிறிய விடயத்திற்குக் கூட சிரமப்பட நேரும். உன் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். வியாபாரத்துறையில் நஷ்டமுண்டு. திருப்தியற்ற வாரம்.

## கும்பம்

காதலர்களுக்குக் கனிவான வாரம். பொதுசனத்தலைமைக்கு இடம் உண்டு. உறவினர் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் தப்பாமல் கிடைக்கும்.

## மீனம்

இனம் தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

# காதலும் கத்தரிக்காயும்

கந்தனவன் தோட்டத்தில் கால் கடுக்க நின்றான்
காசினிக்கே உணவுதரும் பெரிய விவசாயி
செந்நிறத்து மேனியதில் வியர்வை திரண்டோடும்
சிவந்து கை கொப்பளிக்க மண்வெட்டி பாயும்
அந்தநிலம் செழிப்படைய நல்லுரங்கள் இட்டான்
நெற்றியதில் நீர்கோர்த்து தினம் சொரிந்து வந்தான்
வந்தது நற்காலமெனக் கத்தரியும் நட்டான்
தவறாமல் நீரூற்றி மருந்திட்டு வளர்த்தான்.

கத்தரியும் நெட்டெறிந்து காய்கள் பல காய்க்க
கந்தனவன் கைநிறைய காசுகளும் கொண்டான்.
முத்துடைய முழுநிலவாள் செந்நிறத்துப் பொன்னி
முற்றிய நல் கத்தரிக்காய் வாங்கிடவே வருவாள்.
கத்தரிப்பூ நிறமுடைய கண்களது காந்தம்
கண்டோரைக் கவர்ந்திழுக்கும் சிலையொத்தமேனி,
முத்துடைய பல்வரிசை; முழுநிலவு தோற்கும்
முந்துகின்ற கற்பினிலே கண்ணகிக்கு சங்கை.

தினம்தினமும் கத்தரிக்காய் கைநிறைய வாங்க
செம்பவளக் கொடியொத்த துடியிடையாள் வந்தாள்
மனம்கொண்டான் கந்தனவன் கையுழைப்பைக் கண்டு
மலர்ந்ததம்மா காதலங்கே மகிழ்ச்சியுடன் என்றும்
கண்களவை கலந்தனவே காதலிலே தோய்ந்து
கத்தரிக்காய் செய்து வைத்த காதலது வாழி.
விண்ணும் கதைக்கின்ற வித்தகரே கேளும்
காதலது கத்தரிக்காய் எனும் வாயை மூடும்.

— வடகோவை வரதராஜன்

"எந்த அதிகாரத்துடன் என்னை இந்த நாய்கள் தெருவில் வைத்து கடத்தி வந்திருக்கிறார்கள்!" என்று மங்க்ஸ் கேட்டான், தன்னை கடத்தி வந்தஇருவரையும் மாறி மாறி பார்த்தபடி.

"நான்தான் இந்த ஏற்பாடு செய்தேன். நீ வேண்டுமானால் சட்ட அதிகாரிகளுக்கு முறையீடு செய்யலாம். அதே சமயம் நானும் அவ்வாறே செய்வேன். ஆனால் காலம் கடந்தபின் என்னிடம் கருணையை எதிர்பார்க்காதே" என்று பிரவுன்லோ கூறினார். மங்க்ஸ் சற்று அதிர்ச்சியும் அச்சமும் கொண்டான். அவன் தயங்கி நிற்பதைக் கண்ட பிரவுன்லோ கூறினார். "விரைவாக முடிவுக்கு வா. பகிரங்கமாக உன்மீது நான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீ எதிர்பார்ப்பதானால் உனக்கு வழி தெரியும்தானே. இல்லையென்றால் உன்னால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் கருணையை வேண்டிக்கொள்" முப்பத்தொன்று. இந்தத் தொடர்பு மூலம் பிறந்தவன் தான் உனது சகோதரன்"

"நீங்கள் கூறும் கதை நீண்டு கொண்டு போகிறது" என்று அமைதியிழந்த நிலையில் கூறினார் மங்க்ஸ்.


"ஆம் துன்பம் நிறைந்த கதை இது" என்று மீண்டும் ஆரம்பித்தார் பிரவுன்லோ "இறுதியில் உனதுதந்தையின் செல்வந்தரான உறவினர் ஒருவர் மரணமானார். அதன் மூலம் ஏராளமான சொத்துக்கள் உன் தந்தைக்கு வந்தது. அதனைப் பொறுப்பேற்க ரோமுக்கு செல்லவேண்டியேற்பட்டது. அங்கே அவர் நோய் வாய்ப்பட்டார். இச்செய்தி பாரிஸிலிருந்து உனது தாய்க்கு எட்டியது. அவள் உன்னையும் கொண்டு ரோமுக்குப்போனாள். அவள் போய்ச்சேர்ந்தவுடனே உன் தகப்பனார் மரணசாசனம் எதையும் எழுதி வைக்காமலே இறந்து போனார். எனவே அந்தச் சொத்து பூரா கணிக்கப்பட்ட சகோதரனைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்பையனை நான் காப்பாற்றிய போது இங்கே உன் தகப்பன் கொடுத்துவிட்டுப் போன இளம் பெண்ணின் படத்துக்கும் இவனுக்குமுள்ள முகச்சாயல் ஒற்றுமை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதேசமயம் இவனைப்பற்றிய முழு விபரத்தையும் நான் அறியுமுன்பே யாரோ? அவனை என்னிடமிருந்து கடத்தி விட்டார்கள். இதுபற்றி மேலும் உனக்கு சொல்லத் தேவைப்படாது".

"ஏன் தேவைப்படாது?"

"ஏனென்றால் எனக்கு அது எல்லாமே நன்றாகத் தெரியும் நீ மறுப்பதில் பயனில்லை எனக்கு அதைவிட அதிகமாகவே தெரியும் என்பதை உனக்குக் காட்டுவேன்".

எனக்கு எதிராக எதையுமே உம்மால் நிரூபிக்கமுடியாது".

"அதையும் பார்ப்போம். பையனைக் காணவில்லை, என்




கிழவனின் முகத்தை மங்க்ஸ் உற்றுக் கவனித்தான். அவர் சற்றும் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லையென்றதும் பேசாமல் போய் அந்த அறையில் கிடந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். வேலையாட்கள் இருவரையும் வெளியில்போகும்படி கூறிகிழவர் மட்டும் மங்க்ஸுடன் இருந்தார்.

"சரிதான் எனது தகப்பனாரின் பழைய நண்பர் என்னை இப்படி நடத்துவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் மங்க்ஸ். "ஆம் உனது தகப்பனாரின் பழைய நண்பன் என்றதால் தான் உன்னை இவ்வளவு பெருந்தன்மையுடன் நடத்துகிறேன். இப்பொழுதாவது உனது நடத்தைகளுக்காக வெட்கப்படு. எட்வார்ட் லீபோர்ட்" என்று அவனது குடும்பப்பெயரைக் குறிப்பிட்டு பேசினார் பிரவுன்லோ.

"சரி நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்" என்று கேட்டான் மங்க்ஸ்.

"உனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான்"

"எனக்கு சகோதரன் எவனுமில்லை நான் தனிப்பிள்ளை"

"எனக்குத் தெரியும் உனது தாயாருக்கு நீ மட்டும்தான் ஒரே பிள்ளை. ஆனால் அவர்களுக்கிடையில் விவாகரத்து ஏற்பட்டபோது."

"விவாகரத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்"

"சிறிது காலத்தின் பின் உனது தந்தைக்கு புதிய நண்பர்கள் ஏற்பட்டார்கள். அவர்களில் ஒருவர் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி. அவருடைய அழகான புதல்வி மீது உனது தகப்பனுக்கு மிகுந்த விருப்பம் ஏற்பட்டது அப்பொழுது உனக்கு பதினொரு வயது. உன் தகப்பனுக்கு வும் உன் தாயாருக்கும் உனக்கும் வந்து சேர்ந்தது."

இதைக் கேட்டபோது மங்க்ஸ் ஏதோ ஆறுதல் உற்றவன்போல் காணப்பட்டான். அதே சமயம் பிரவுன்லோ தொடர்ந்தார்.

"உனது தந்தை வெளிநாடு செல்வதற்குமுன் லண்டன் வழியாக செல்கையில் இங்கு என்னை சந்திக்கவந்தார்.

"அதுபற்றி நான் கேள்விப்படவே இல்லை. இடைமறித்தான் மங்க்ஸ்.

"அவர் என்னிடம் வந்தார். வந்தபோது தமது கையாலேயே வரைந்த ஒரு இளம் பெண்ணின், அவருடைய நேசத்துக்குரியவளின் படம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அதை தம்வீட்டில் விடுத்துச்செல்லவோ தம்முடன் கொண்டு செல்லவோ அவர் விரும்பவில்லை. தன்னைத்தாமே அவமதிப்புக்குள்ளாக்கி கொண்டுவிட்டதாக புலம்பினார். தமது சொத்தின் ஒரு பகுதியை விற்று உனக்கும் உன்தாய்க்கும் எழுதிவிட விரும்பினார். நாட்டைவிட்டு வெகுதூரம் சென்று விடவும் யோசித்தார். ஆனால் தனது இரகசிய காதலின் விளைவாக அப்பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி எனக்கும் கூட அவர் சொல்லவில்லை. எனக்கு எல்லாவற்றையும் எழுதுவதாகவும் பின்வந்து சந்திப்பதாகவும் கூறிச்சென்றார். அதுதான் கடைசி. அதன் பிறகுஅவரைக் காணவே இல்லை.

அந்த இளம் பெண்ணைச் சந்தித்து அவளுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க நான் விரும்பினேன் ஆனால் நான் செல்வதற்கு ஒருவாரத்துக்கு முன்பே அந்த குடும்பம் இருந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தால் உனது புறக்கணிக்கப்பட்ட ... னால் கண்டுபிடிப்பதும் சாத்தியமில்லை. உனதுதாய்இறந்துவிட்டதால் உன்னால் தான் மர்மத்தை விளக்கமுடியும் என்று கருதினேன். உன்னை லண்டன் முழுவதும் தேடினேன், கடைசியில் மிகக்கேவலமான கீழ்த்தரமான குற்றவாளிகளுடன் நீ நட்பு கொண்டு திரிவது தெரியவந்தது. இரவு பகலாக லண்டன் நகரில் நடந்து இரண்டுமணி நேரத்துக்கு முன்பு தான் நீ அகப்பட்டாய்" இப்போ என்னைக் கண்டு விட்டீர்கள். இனி என்மீது ஏதாவது உங்கள் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? ஒரு சிறுபிள்ளைக்கும் மோசமாக வரையப்பட்ட ஒரு படத்துக்குமுள்ள முக ஒற்றுமையை வைத்துக் கொண்டு என்னை என்ன செய்யமுடியும் சகோதரன் என்கிறீர்கள். ஒரு குழந்தை பிறந்ததா என்பது கூட உமக்குத் தெரியாதே! என்று கூறியபடி மங்க்ஸ் எழுந்தான்.

"தெரியாது தான்" என்று கூறியபடி பிரவின்லோவும் ஆனால் கடந்த இருவாரங்களில் அதையும் அறிந்துகொண்டேன். ஒரு உயில் இருந்துள்ளது. அதை உன் தாய் அழித்துவிட்டாள். அந்த இரகசியமும் அதன் வாரிசுரிமையும் அவள் இறந்தவுடன் உனக்கே வந்து சேரும். வந்து சேரவேண்டிய நிலை. அதில் ஒரு சிறுபிள்ளையைப் பற்றிய குறிப்பும் இருந்துள்ளது அந்தப்பிள்ளை நல்லாக வளர்ந்ததும் தகப்பனாரின் சொத்துக்கள் அவனைச் சேர வேண்டுமென்றிருந்தது. ஆனால் அவனும் உன்னைப் போல் கீழ்மகனாக மாறுவானாகில் உங்கள் இருவருக்குமிடையில் அந்தச் சொத்து பகிர்ந்து கொள்ளப்படவேண்டும் அந்தப்பிள்ளையை நீ எப்படியோ

(12-ம் பக்கம் பார்க்க)

## தமிழாசிரியர் பற்றி ஒரு பொலிஸ்காரரின் மதிப்பீடு

தமிழ் ஆசிரியர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அருகே உள்ள பாதுகாப்புத்தடுப்பு நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் காரரின் கண்டுபிடிப்பு இது. அண்மையில் பெர்லின் சென்ற ஆசிரியர் ஒருவரிடமே அந்தப் பொலிஸ்காரர் தமது கண்டுபிடிப்பை வெளிப்படுத்தினுராம்.

அந்தப் பொலிஸ்காரர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டதுடன் அன்று தமிழ்ப் பிரயாணிகளுடன் நடந்துகொண்ட முறையையும் எமது வாசகர்கள் அறிந்துகொள்வது நல்லது என்பதால், வாசகர்களை அங்கு அழைத்துச்செல்கிறேன்.

பல தமிழ், சிங்களப் பிரயாணிகளுடன் கொழும்பிலிருந்து சென்ற மினிபஸ் ஒன்று கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து 100 யார் தொலைவிலுள்ள பாதுகாப்புத் தடுப்பு நிலையத்தில் நிறுத்தப்படுகிறது.

ஆயுதம் ஏந்திய இரு பொலிஸ்காரர்களில் ஒருவர், ஆங்கிலத்தில் எல்லோரையும் இறங்குமாறு பணிக்கிருர். முதலில் ஏறும் செல்ல இருந்த சிங்கள இளைஞரும் தாயாரும் இறங்குகிருர்கள்.

"எனது பாஸ்போட்டைப் பார்க்கப் போகிருயா?" அந்த சிங்கள இளைஞர் சற்று அதட்டலுடன் கேட்கிருர். பணிந்து போன பொலிஸ்காரர் "நீர் சிங்களவரா?" என்று கேட்க, தாயும் மகனும் 'ஆம்' என்று கூறியதும்; சரி, சரி ஏறுங்கள் என்று சொன்னதும் அவர்கள் பஸ்ஸில் ஏறி விட்டார்கள்.

அடுத்து இறங்கியவரிடம் பெயரைக் கேட்ட போது அவர் தமது தமிழ்ப்பெயரை உரத்த குரலில் கூறியதும் அவரும் மற்றும் அந்த ஆசிரியர் உட்படச் சில தமிழ்ப் பிரயாணிகளும் இறக்கப்பட்டு சிங்களப் பிரயாணிகளுடன் மினி பஸ்ஸேமலே செல்ல அனுமதிக்கப்பட்டது.

தமிழ்ப் பிரயாணிகளின் பொதிகள் சோதனையிடப்பட்ட வேளையில் விசாரணையும் நடக்கிறது.

பொலிஸ்: எங்கே போகிருய்?

ஆசிரியர்: பெர்லின்

பொலிஸ்: ஏன்?

ஆசிரியர்: நண்பர் ஒருவரைச் சந்திக்க

பொலிஸ்: நண்பரைச் சந்திக்கவா பயங்கரவாத பயிற்சி பெறவா? எனக்குத் தெரியும் ஆசிரியர்கள் எல்லோருமே பயங்கரவாதிகள்.

ஆசிரியர்; இல்லை, நண்பரைச் சந்திக்கவே போகிறேன்.

பொலிஸ்; சரி, சரி, பயங்கரவாதப் பயிற்சியை முடித்துக் கொண்டு வாருங்கள், நாம் இங்கு எதற்கும் தயாராகவே இருக்கிறோம்.

பொதிகள் சோதனையிடப்பட்ட பின் விமான நிலையம் வரை நடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை அந்தத் தமிழ் பிரயாணிகளுக்கு.

— காந்தன்


# சித்தாலேப ®

சித்தாலேப...

வலியையும், வேதனையையும் குணப்படுத்தும் அபாயமற்ற ஒரே மார்க்கம்! பல மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்பட்டதே சித்தாலேப! வலியும், வேதனையும் ஏற்படும் பட்சத்தில் சித்தாலேபயை தடவினுல், உடனடி நிவாரணம் கிட்டும் மனித வர்க்கத்தின் கண் - சர்மம் போன்ற வற்றிற்கு பாதகமற்றதாகவும், அபாயமற்றதாகவும் சித்தாலேப அமைந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. வாலிபர்களும், வயோதிபர்களும் சித்தலேபயின் நறுமணத்தினுல் கவர்ந்து ஈர்க்கப்படுகின்றனர்.

உபயோகிக்கும் முறை

### தடுமலுக்கும், தலைவலிக்கும்:

மூக்கினுள்ளும், நெற்றியிலும், இருபக்கப் பொட்டியிலும், கழுத்தைச் சுற்றிலும் தடவவும். சித்தாலேப தைலத்தை சிறிது ஒரு கோப்பைக் கொதிநீரில் இட்டு, தலையைநன்கு ஒரு உளன் போர்வையினுல் மூடிக்கொண்டு எழும் ஆவியை ஆழமாக இழுத்து சுவாசித்தால் நிவாரணம் கிட்டும். அடிக்கடி இப்படி செய்தால் துரித நிவாரணம் கிட்டும்.

### தொண்டை அழற்சி:
(டொன்சி லயிட்டிஸ்)

சித்தாலேபயை சிறிது விரலில் எடுத்து தொண்டையின் உட்புற சுவர்களிலும், கழுத்துப் பகுதிகளிலும் நன்ருகத் தடவவும். இப்படி செய்வதனுல் தொண்டைச்சவி இறங்கி, தொண்டையும் சுத்தமடைகின்றது. கழுத்தை கம்பளித் துண்டினுல் கட்டிவைத்து ஒவ்வொரு மூன்று மணித்தியாலயத்துக்கு ஒருமுறை இதனை மீண்டும் மீண்டும் செய்தால் மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் தொண்டைஅழற்சியிலிருந்து பூரண குணமடைந்தவர்களாகின்றீர்கள்.

### இருமலுக்கும் ஆஸ்மாவுக்கும்:

எப்பொழுதாவது சுவாசிக்கக்கஷ்டமேற்பட்டால் அல்லது நெஞ்சு பாரமாகி வரட்சியான இருமல் ஏற்படும் பட்சத்தில் சித்தாலேபயை கழுத்தைச்சுற்றிலும் மார்பிலும் தடவவும். சித்தாலேபயை நன்ருக முதுகெலும்பில் தடவி தேய்த்தால் மேலதிகநிவாரணம் கிட்டும். மேலும் சிறிதை தொண்டையில் தடவி ஓய்வு எடுக்க வேண்டும். சித்தாலேபயை கொதிநீரிலிட்டு சுவாசிக்கவும் பாதிக்கப்பட்ட உறுப்புகளை கம்பளிப் போர்வையினுல் போர்த்தி உஷ்ணமாக வைத்துக்கொள்வதுடன் கழுத்தைக் கம்பளி துணியினுல் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கொரு முறை இதனை மீண்டும் மீண்டும் செய்வதால் குணமடைவீர்கள்.

### பல்வலிக்கு:

பூச்சிப்பல், பல் அரணையினுல் ஏற்படும் வலிக்கு, சிறிது சித்தாலேபயை எடுத்து பாதிக்கப்படும் பகுதிகளில் இடவும். வாயிலிருந்து துர்நாற்றம் ஏற்படும்பொழுதும், பற்கள் நிறம்மாறும் பொழுதும், சிறிது சித்தாலேபயை விரலில் எடுத்து விளிம்பில் நாள்தோறும் தடவவும். இப்படி செய்வதனுல் வாய்சுத்தமாகவும், பற்கள் நிறம் மாருமலும் இருக்கும். பாவிக்கும் எந்த விதமான பற்பசையையும் தொடர்ந்தும் உபயோகிக்கலாம்.

### கீறல், வெட்டுக்காயம், வாத நோய்கள், வீக்கம்.

சந்திகளில் ஏற்படும் வலிகளினுலும், விளையாடும் பொழுது, பந்து அல்லது பந்து மட்டையினுல் ஏற்பட்ட தாக்கத்தினுல் தசையில் ஏற்படும் வீக்கத்தினுலும், அல்லது நடக்கும் பொழுதோ ஓடும் பொழுதோ ஏற்படும் தசைபிசகினுலும் ஏற்படும் பாதிப்புக்களுக்கு சித்தாலேப ஒரு உகந்த ஔசதமாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் சித்தாலேபயை தடவி நன்ருகத் தேய்க்கவும். பகுதிகளை கம்பளி "பெண்டேஜுகளினுல் கட்டி உஷ்ணமாகவைத்துக்கொள்ளவேண்டும். கீறல்கள் வெட்டுக்காயங்களுக்கும் சித்தாலேபயை பாவியுங்கள். எல்லாவருத்தங்களுக்கும் மூன்று மணித்தியாலத்திற்கு ஒருமுறை மேற்கூறியபடி சிகிச்சை தொடரவேண்டும்.

### வயிற்று நோய்:

அஜீரணம், வயிறுஊதல், வயிற்று வலி ஏற்பட்டால் சித்தாலேபயை, வயிற்றில் தடவி அப்பகுதியை உஷ்ணமாக வைத்திருப்பதன் மூலம் குணப்படுத்தலாம் பூரண குணமடையும் வரை, ஒவ்வொரு மூன்று மணித்தியாலங்களுக்கொரு முறை சிகிச்சை செய்யவும்.

### மாதவிடாய்:

மாதவிடாய் காரணமாக ஏற்படும் சகல வலிகளையும், சித்தாலேபயை வயிற்றைச் சுற்றிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் தடவி குணம் பெறலாம். பகுதிகளை உஷ்ணமாக வைத்திருக்கவும், தொடர்ச்சியாகச் சிகிச்சையளிக்கவும். கட்டாயம் குணமடைவீர்கள். நாளொன்றுக்கு சித்தாலேபயினுல் இருமுறை சிகிச்சையளிக்க வேண்டும்.

### சன்னிச்சுரம், மலேரியாகாய்ச்சல்:

முதுகெலும்பிலிருந்து, விசேடமாக கழுத்திலிருந்து கீழேயும், தலையிலிருந்து கால் வரையும் முழு உடம்பிலும் சித்தாலேபயைத் தடவவேண்டும் உடம்பில் வலி ஏற்படும் பொழுதெல்லாம் சித்தாலேபயைத் தடவவும். உடம்பை உஷ்ணமாக வைத்திருந்து, சித்தாலேபயை இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு முறை தடவவும் குழந்தைகளாக இருந்தால், 1/4 கிரும் சித்தாலேபயை உபயோகியுங்கள். மேற்கூறிய சிகிச்சையை பூரண குணமடையும் வரை தொடரவும். எந்தச் சமயத்திலும் வெந்நீரை துரித பூரண பலனுக்காக அருந்துங்கள்.

### பொது அறிவுரை

மிருக கொழுப்பும், தீங்கும் அற்றதே சித்தாலேப. துரிதமாக இயங்கி துரித குணம் அளிப்பது சித்தாலேப. ஏனைய தைலத்தைப் போல அல்லாமல் சித்தாலேப ஒவ்வொரு வீட்டினதும் வைத்தியர் சித்தாலேபயை உபயோகிக்கும் பொழுது வெந்நீரைப் பாவித்து உடம்பை உஷ்ணமாகப் பாதுகாத்துக் கொள்ள தவருதீர்கள். சிகிச்சை பெறும்பொழுது பூரண ஓய்வுபெற மறந்துவிடாதீர்கள். எல்லா வலியும், வேதனையும் பூரண குணமடையும் வரை சித்தாலேப உபயோகியுங்கள். நீங்கள் நிவாரணமடைந்த பின்பு சித்தாலேபயைப்பற்றி பிறருக்கும் கூறுங்கள்.

ஹெட்டிகொட இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
33/3, ஸ்ரீ தர்மராம ரோட் – இரத்மலானை.
தொலைபேசி: 716910

இது தருவது
சுத்தம்
அழகு
ஆரோக்கியம்

விசாகா
சோப்

இது தடுப்பது
பொடுகு
தலைமயிர் உதிர்தல்
சரும ரோகங்கள்


## பல் துலக்கு

ஆலும் வேலும் பல்லுக்குறுதி. கருவேலங் குச்சியால் பல் துலக்கினுல் பற்களுக்கு உறுதி. வேப்பங்குச்சி ஒளியும் நீர்பூலாங்குச்சி வீரிய விருத்தியும், ஆலம்விழுது லட்சுமிகரமும், நாயுருவிவேர் முகவசீகரமும் தரும். செங்கல், மணல், சாம்பல் கரி, தென்னம்பாளையால் பல் துலக்கினுல் தரித்திரியமுண்டாகும்.

— ஜோஸ்யர் சச்சி

## காரணம்

திட்டங்கள் பல
திறம்படத்
தீட்டி
திட்டங்கள்
திடமாகு மிடத்து
தடை!
காரணம்
சோதிடம்!

–அரியாலை சுப்புரவி

# சத்துணவில் கீரை வகைகளின் பங்கு

உலகிலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் உணவுதான் முதல்தேவை என்பதை நாம் அறிவோம். தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய உணவை மண்ணிலிருந்தும், காற்றிலிருந்தும், நீரிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றன. ஆனால் மிருகங்கள் தாவரங்களையும், தாவரங்களையுண்ணும் சிறிய மிருகங்களையும் உணவாகக்கொள்கின்றன. மனிதனோ சிறந்த தாவரங்களையும் பிராணிகளையும் தேர்ந்தெடுத்து வளர்த்து அதில் தனக்குகந்த பகுதியை மட்டுமே உணவாகக் கொள்கின்றான். மனிதனின் உணவுப்பழக்கம் அவன் வாழும் பகுதிகளில் வளரும் தாவரங்களையும், பிராணிகளையும் பொறுத்து மாறுபடுகின்றது. அவன் சாப்பிடும் உணவுகளைப் பொறுத்து அவனுக்குச் சத்தும், வேலை செய்யும் சக்தியும் கிடைக்கின்றது. சக்தி கொடுக்கும் உணவுகளை மட்டும் சாப்பிட்டால் போதாது. நோய்கள் வராமல் தடுக்கவும், நோய்களை எதிர்த்து நிற்கவும் வைட்டமின் சத்துக்களும், தாதுப்புக்களும் நிறைந்த உணவை நாம் சாப்பிடவேண்டும்.

நமது உணவில் புரதம், மாவுப்பொருள், கொழுப்பு, வைட்டமின், தாதுப்பு முதலிய அனைத்தும் சீரான அளவில் இருக்கவேண்டும். அதைத்தான் சமசீர் உணவு என்று சொல்லுகிறோம். சமச்சீர் உணவுத் திட்டத்தின்படி தேவையான வைட்டமின் சத்துக்களையும் தாதுப்புக்களையும் பெற ஒருவர் தினசரி 125 கிராம் கீரைகளையும் 75 கிராம் காய்களையும் அரிசி, பருப்பு போன்ற மற்ற உணவோடும் சேர்த்துச் சாப்பிடவேண்டும். அரிசி பருப்பு போன்ற உணவுகளில் நமக்குத் தேவையான மாவுப் பொருள்களும், புரதமும் மட்டுமே கிடைக்கின்றன. சமைக்கும்போது அதிக நேரம் வேகவைக்காமலும், வேகவைத்த நீரை இறுத்து விடாமலும் இருக்கவேண்டும். சமைக்காமல் சாப்பிடக்கூடிய பல கீரைகளையும் பச்சையாகச் சாப்பிடகற்றுக்கொள்ளவேண்டும். நமது இருதயம் சரியாகச் சுருங்கிவிரிவதற்கும் சுண்ணும்புச்சத்து அவசியம். சுண்ணும்புச்சத்து வளரும் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் மிகமிக அதிகமாகத் தேவைப்படுகின்றது. சுண்ணும்புச் சத்து அகத்தி, முருங்கை, தண்டுக்கீரை அரைக்கீரை, வேளைக்கீரை, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, நஞ்சுக் கொட்டைக் கீரை, மணத்தக்காளிக் கீரை, கரிசலாங்கண்ணிக் கீரை, பாலக் கீரை முதலியவற்றில் அபரிமிதமாகக் கிடைக்கின்றது.

இரும்புச் சத்து நம் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இரும்புச் சத்துக் குறைவினால் இரத்த சோகை உண்டாகிறது. கர்ப்பிணிகளுக்கு இரும்புச் சத்து நிறைய வேண்டும். இரும்புச் சத்து முளைக் கீரை, அரைக் கீரை, கொத்தமல்லி, மணத்தக்காளிக் கீரை, குப்பைக் கீரை, நச்சுக் கொட்டைக் கீரை, பசலை கீரை, வல்லாரைக் கீரை, புளிச்சக்குக் கீரை, வேளைக்கீரை முதலிய கீரைகளில் நிறைய கிடைக்கிறது.

மேற்கூறிய கீரைகளைவிட எல்லா வைட்டமின் சத்துக்களும் தாதுப்புக்களும் ஒருங்கே கொண்ட கீரை தவசிக் கீரையாகும். இக்கீரையைச் சமைக்காமல் பச்சையாகவும் சாப்பிடலாம். ஒரு முறை நட்டுவிட்டால் பல ஆண்டுகளுக்கு கீரைகளைப் பறிக்கலாம். ஒவ்வொரு தோட்டத்திலும் அவசியம் வளர்க்கப்பட வேண்டிய கீரை தவசிக் கீரையாகும்.

வைட்டமின்கள்மட்டுமின்றி நம்உடல்வளர்ச்சிக்குத் தேவையான பாஸ்பரஸ், மக்ஸியம் சோடியம், பொட்டாசியம் போன்ற தனிமங்களும் கீரை வகைகளில் போதிய அளவில் கிடைக்கின்றன. ஆகவே எளிதில் மலிவாகக் கிடைக்கக் கூடிய கீரைகளை நாள்தோறும் நமது உணவில் சேர்த்து ஆரோக்கிய வாழ்வு பெறுவோம்.

தொகுப்பு:
க. கனகராசா ச. நீ.

ஆதாரம்: நம்நாட்டுக் கீரை வகைகள்

[உலகளாவிய நிலையில் மக்கட் தொண்டாற்றி வரும் வின்செண்ட்டி போல்சபை யாழ். நாவாந்துறையில் கால்கொண்டு இன்று எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது]

## ஆலெனப் பரந்த மா அருஞ்சபை!

கூவும் குயிலினங்கள் கூடி வர
குஞ்சும் குருவிகளும் குடியிருக்க
கொஞ்சிக் குலவி வரும் பிராணிகளும்
தஞ்ச மென வாழ்ந்திடுதே அம் மரத்தில்

பசி கண்டு பறந்து வந்த பைங் கிளியும்
பழ முண்டு உறங்கி யங்கு சென்றனவே
எவ்வுயிர்க்கும் நிழல் தந்தே அம் மரந்தான்
என்றென்றும் மிகத் தழைத்தே ஓங்கி நிற்கும்.

களைப் புற்ற வழிப் போக்கர் தங்கிடவே
இளைப் பாற நிழல் தேடி வந்தமர்ந்து
வணிகனும் கூட வந்து சேர்ந்திடவே
வழக்கம் போல் தூங்குகின்றார் மரத்தடியில்

ஆலெனத் தள்ழத்து நிற்கும் எம் சபையும்
ஆற்றிடும் சேவைகள் பலகண்டு
ஆர்வமாய் ஊக்குவிக்கும் பங்குத் தந்தை
அன்பினால் தொண்டு செய்வோம் ஏழைகட்கே

—நாவாந்துறை
ம. சிந்தாத்துரை

## சஞ்சிகை அறிமுகம்

துர்க்கா
(இன்று கலை இலக்கியத் திங்கள் இதழ்)
ஆசிரியர்;
எஸ் கே. யோகநாதன்
விலை:
ரூபா 5-00
பக்கங்கள்;36

சஞ்சிகையை ஆரம்பத்திலிருந்து ஆசிச் செய்திகளும் விளம்பரங்களும் அரைவாசிப் பக்கங்களையே ஆட்கி செய்து விட்டன. இதைவிட, அச்சுக் கலை அனுபவமற்றவர்கள் ஒவ்வொரு ஆக்கத்திற்கும் பெருமளவு மனசுவைத்து 'Space கொடுத்துவிட்டார்கள். மிகுதி கால்வாசியும், சிறுகதை, ஒரு சில கவிதைகள், யோகசுவாமியின் சிறு வரலாறு, பலபோட்டிகள், வருஷபலன் இவ்வாறாக நிரப்பப்பட்டுள்ளன. வாசகன் மூக்கில் விரலைவைத்து இதுவா 'துர்க்கா' என ஏங்கும் நிலை ஏதோ ஒரு பஞ்சாங்கத்தின் மறு பதிப்பு மாதிரி. எடுத்த எடுப்பிலேயே தன்னை இனங்காட்டிக்கொள்ளமுடியாதநிலை தரத்திற்கும் தகுதிக்கும்காலம் பதில் சொல்ல வேண்டிய நிலை. எழுத்துப் பிழைகள் மலிவு. சுருங்கச் சொன்னால், எடுத்த எடுப்பில் ஆகாயக் கோட்டை கட்டுவதை விட மண் குடிசையில் சிறப்புற வாழ்தல் மேல்.

—'ரிஷி'

○

## 'மணி ஒலி'

எழுவைதீவு மக்களின் அபிலாஷைகளை வெளிக்கொணரும் நோக்குடன் அழகான அமைப்புடன் வெளியாகியுள்ளது 'மணி ஒலி'. மணியான கையெழுத்துக்களையும், பத்திரிகைகளில் வெளியான விஷயதானங்கள் சிலவற்றையும் 'போட்டோஸ்ரட்' செய்து புதிய முறையில் மணி ஒலி வெளி வந்துள்ளது. பார்வைக்கு அச்சுப் பதிவுப் பத்திரிகை போல் கவர்ச்சியாகவுள்ளது. இலவசமாக இதனைப் பெறவிரும்புபவர்கள் இதன் வெளியீட்டாளர்களான இல.144, பலாலி வீதி, கந்தர்மடம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

—ஐ. சண்.

# 65 வயதில் வாழ்க்கை மீண்டும் ஆரம்பிக்கிறது

'வாழ்க்கை ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் புதுமையாக, புதுமணத்தோடு ஆரம்பமாகின்றது' என்றார் ஒரு அறிஞர்.

அப்படியிருக்க நாம் வயது போய்விட்டதே என்று வீணை முடங்கிக்கொண்டிருக்கலாமா?

வயதை ஒருபுறம் வைத்துவிட்டு, நாம் எதனைப் புதிதாக சாதிக்கலாம் என எண்ணிச் செயல்படத் தயாராகுங்கள். வாழ்க்கை புதிதாகத் தோன்றும், புத்தம்புதிதாகத் தோன்றும்.

நம்மால் சாதிப்பதற்கு எத்தனையோ விஷயங்களிருக்கின்றன. காத்திருக்கின்றன.

ஒரு வயதை அடைந்ததும் ஒருவர் எல்லாவற்றையுமே இழந்துபோய்விடுவதில்லை சில சந்தர்ப்பங்களில் வயது முதிர்ந்த நிலையில்தான் நல்ல அனுபவங்களைப் பெற்று நல்ல ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

பல நாடுகளின் பிரதமர்களும், ஜனாதிபதிகளும் தமது 70களில் உறுதியுடன் சேவையாற்றிப் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்கள்.

நீதிபதிகள் தமது 80 களில் பல முக்கிய தீர்ப்புக்களைக்கூறியுள்ளார்கள்.

இத்தகையவர்கள் மட்டுமல்ல இன்னும் பலரது அனுபவங்களைப்பெற சமுதாயம், தேசம், உலகம் காத்துநிற்கிறது.

அனுபவப் புத்தகங்களைப் படிக்க ஆராய்ச்சியாளர்களும் மாணவர்களும் காத்துநிற்கின்றார்கள்.

நாட்டில் வருடாவருடம் முதியவர்களும் கூடிக்கொண்டேயிருப்பார்கள். இவர்களை உறுதியுடன், சுறுசுறுப்புடன், உற்சாகத்துடன், பிரயோசனமாக சந்தோஷத்துடன்வைத்திருப்பதற்குஏற்ற நல்ல சூழலை அமைத்துக் கொடுப்பது அந்தச்சமுதாயத்தின் கடமை என்பதும் உணரப்படவேண்டும்.

''நாங்கள் மானிட வாழ்வுக்கு வயதெல்லைகளைக் கூட்டியுள்ளோம். இப்போது இந்த வருடங்களுக்கு சுவை கூட்டவேண்டும். வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கவேண்டும்'' எனேடிய மனித இயல் சம்பந்தமான ஆராய்ச்சிச் சபையின் அர்த்தமுள்ள வாக்கியம் இது.

வயது முதிர்ச்சி என்பது சில இளைஞர்கள் கருதுவதுபோல் ஒரு வியாதியல்ல, என்பது எமக்கு நன்கு தெரியும். பொறுமை, பரஸ்பரம் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, மனிதாபிமானம் இவற்றை சம்பந்தப்பட்டவர்களும் குடும்பத்தினரும், நண்பர்களும், வைத்தியர்களும், தாதிமார்களும், அனுசரித்து நடந்தால் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கலாம், பயனுள்ளதாக்கலாம்.

தனிமையும் தனித்து ஒதுங்கி வாழ்வதும் தான் வயோதிப காலத்தின் பெரும் பயங்கர எதிரிகள் என்று கூறலாம் உலகத்துடன் தொடர்பு கொள்ள இவர்களுக்கு உதவுங்கள். இவர்களுடன் சிறிது நேரம் மனம் கலந்து பேச முயலுங்கள்.

வயது வந்தவர்கள் சிறிது மரியாதையை எதிர்பார்ப்பது சகஜம் தான். இதனைக் கொஞ்சம் கொடுத்துப் பாருங்கள். பெரிய நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. நாம் கவனிக்கப்படுகின்றோம் என அறியும்போது பிறரைக் கவனிக்கவும் நமக்கு விருப்பம் வருகின்றதல்லவா?

சாப்பாட்டு விஷயத்தில் இவர்கள் ஓரளவு அக்கறை காட்டி வருவது உடல் நலத்தைப் பேண மிகவும் உதவுவதாக இருக்கும். ஒழுங்கான நேரத்தில் உணவு உட்கொள்ளல் உடல் நிலையைப் பாதுகாக்க உதவும்.

சிறிதளவு மதுபானம் கூட இவர்களுக்கு பெரிய கெடுதியை ஏற்படுத்தி விடாது. சமிபாட்டுக்கும் மனக்கவலைப் போக்கிக் கொள்ளவும் இது உதவும். மன ஒய்வுக்கு பலவித மருந்துகளை உட்கொண்டு இதற்கு அடிமையாவதை விட இவ் விதம் செய்வது கெடுதி குறைவாகவே இருக்கும்.

குடும்ப வாழ்க்கையும் இவர்களுக்கு வாழ்க்கையில் பற்றைப் பிடிப்பை ஏற்படுத்த உதவுகிறது.

இந்த வயதுடையவர்கள் தம்மைத் தாமே மற்றவர்களுடன் கலந்து உற்சாகப்படுத்திக்கொள்வது வாழ்க்கையில் அலுப்புத்தட்டாமலிருக்க உதவும். தம்மாலான பணிகளை தாம் வாழும் சமுதாயத்துக்கு தாராளமாகச்செய்ய முன்வரலாம். இறைவனைப் பார்த்து பயந்து பயந்து அழுது கொண்டிராமல் நம்பிக்கை வைத்துப் பிரார்த்தனை செய்ய முன்வாருங்கள், இந்த நம்பிக்கையில் ஆறுதல் அடையுங்கள். மன ஒய்வு கொள்ளுங்கள். மனச்சாந்தி பெறுங்கள். வாழ்க்கையில் தெம்பைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இதற்கு உங்கள் பிரார்த்தனைகள் உதவட்டும்.

நல்ல நூல் நிலையங்களில் உங்கள் நேரத்தை நன்கு செலவிடுங்கள். நல்ல நண்பர்கள் உங்களுக்கு நல்ல ஆறுதலாக இருப்பார்கள். உற்சாகமளிப்பவர்களாக இருப்பார்கள். உங்கள் குடும்பத்துடன் சந்தோஷமாக கவைத்து வாழ சகல உரிமையும் உங்களுக்கு இருக்கின்றது இதனை மறந்து விடாதீர்கள்.

மீண்டும் உற்சாகமாக வாழத் தொடங்குங்கள். நல்லதொரு வாழ்க்கை உங்களுக்காகக் காத்து நிற்கிறது,

வாழ்க்கை 'மீண்டும் 65-ல் தொடங்குகிறது' என்ற டேவிட் லாண்டரது கட்டுரையைத் தழுவி-தமிழில் -
கணேஷ்

## பாரதியின் பன்முகப்பார்வை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

### பாரதி இந்து மேலாதிக்க வாதியா

பாரதியின் சமயப் பொறை புகழ் பெற்றது. இப் பண்பை இந்நூலில் பலரும் விதந்து கூறியுள்ளனர். பாரதி தம்மை ஒரு சித்தனைப் பல இடங்களி லும் கூறியுள்ளார். சித்தர் நெறியைப் பாரதி முழுமை யாகஏற்றதனுலேயேபாரதிக்கு சமயத்தில் முற்போக்குப் பார்வை வாய்த்தது. பாரதி தீவிர பக்தி கொண்ட இந்து வாக இருந்த போதிலும் அவர் சர்வ சமய சமரச ஞானியாகத் திகழ்ந்தார் என்பதை அவரது படைப்புக்கள் காட்டும்: தவ ருன எடுத்துக் காட்டுக்கள் மூலம் நுஃமான் பாரதியை இந்து மத ஆதிக்கவாதி என்று நிறுவ முயன்றுள்ளமை வியப் புத் தருகிறது. (பக்175)

''ஐயோ எத்தனை வருஷங் களாக 'பெண்கல்விவேண்டும்' என்று கூச்சலிட்டவெல்லாம் தமது பெண்கள் பாதிரிப் பள்ளிக் கூடத்துக்குப் போய் டைபில் வாசித்துக் கொண்டு வரும் பொருட்டா கத் தானு?''

என்று பாரதி எழுவது இத் தகைய ஹிந்து மேலாதிக்க உணர்விஞலேத் தான் என்கிருர் நுஃமான். (பக்.175) பாரதி தமது சகோதரிகள் இந்துப் பள்ளிக் கூடத்தில், இந்துமதம் பயிலவேண்டு மென்று கூறு வதை இந்த மேலாதிக்க உணர்வு என்பதற்கு நுஃமான் பயன் படுத்திய அளவுகோல் எது என்பது புரியவில்லை. இந்து மதத்தின் மீது நுஃமான் கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சி பாரதி ஆய்வுக்கு அளவுகோ லாக முடியுமா? என்பது சிந் திக்கத் தக்கது.

### பாரதியும் புதிய ருசியாவும்

பாரதி பாடியது பெப்ரவரிப் புரட்சியா? நவம்பர் புரட்சியா? இது கால் நூற்ருண்டாக 'அடி படும்' பிரச்சினை. 'பெப்ரவரி' என்பவர்களெல்லாம் துரோகி கள், பிற்போக்கு வாதிகள் என் பது சிலரது கருத்து. இக் கரு த்தை இந்நூலிலும் ரவீந்தி ரன் விரிவாக ஆராய்கிருர். சிறந்த ஆய்வாளனுக்குரிய நடு நிலையில் இருந்து பெப்ருவரி, ஒக்டோபர் புரட்சிகள் பற்றிய பாரதியின் கருத்துக்களையெல் லாம் முயன்று தொகுத்துத் தரும் ரவீந்திரன் முடிவு கூறும் போது மட்டும் ரகுநாதன் பரம் பரையினரை அடியொற்றி இடறி வீழ்ந்து விடுகிருர். பெப்ருவரிப் புரட்சி பற்றி 28-03-1917இல் பாரதி எழுதி யதை மேற்கோள் காட்டிய ரவீந்திரன், ஆய்வாளர் என்ற முறையில் அதே கருத்துக்கள் 'புதிய ருஷியா'விலும் முன் வைக்கப்பட்டிருப்பதை 'பழக்க வாசனையால்' இனங் காணத் தவறிவிடுகிருர். இப்பாடலின் தலைத்தலைப்பு 'ஜாரின் வீழ்ச்சி' ருசியமொழியில் முதல் வெளியீட்டில் 'ஜாரிசத்தின் வீழ்ச்சி என்றே பதிப்பாள இ.பி. செலிஷேவ் குறிப்பிட்டி ருக்கிருர். [விளாதிமீர் ஏ.மக ரெங்கோ, 1982] லெனினை அல்லும் பகலும் அனவரதமும் நினைத்ததாக எழுதும் பாரதி இப்பாடலில் லெனினைக் குறிப்பிடவில்லை. இது ஒன்றே இப் பாடல் ஜாரிசத்தின் வீழ்ச் சியை அறிந்துடன் மகிழ்ந்து பாடியது என்பதை நிறுவப் போதியதாகும். பெப்ருவரியில் வீழ்ந்த ஜாரைத் நவம்பரில் பாட, பாரதி செத்த பாம்ப டிக்கும் வீரஞ? என்பதை ஆய் வாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆய்வாளர்கள் என் றும் உணர்வுகளை முதனிலைப் படுத்துவதில்லை!

### பாரதியும்ஈழமும்

இந்நூலின் இறுதிக்கட்டுரை தில்லைநாதனின் ''பாரதியும் இலங்கையும்'' என்பது. இக் கட்டுரையே இத் தொகுப்பில் மிகவும்தரங்குறைந்தகட்டுரை என எனது 'கற்றறிந்த' நண் பர்ஒருவர்கூறினர். அதற்கான காரணத்தைக் கூற அவர்முன் வரவில்லை. ஆனல்இக்கட்டுரை எனக்குமிகவும்பிடித்தது. இது பட்டியலிடும் முதல் முயற்சி. ஆனல், யாரையும் இருட்ட டிப்புச் செய்ய வேண்டு மென்று எண்ணுமல் முக்கியமான வர்களையெல் லாம் இக்கட்டுரை குறிப் பிடுகிறது. இதுவே இக் கட்டு ரையின்சிறப்பு. ''பாரதி ஆய் வுகள்''தொகுப்பிலுள்ள பார தியும் இலங்கையும்பற்றிய கட்டுரைகளோடு இதனை ஒப் பிட்டுக் கற்பதுபயனுள்ளது.

### பணி தொடர்க

இலங்கையில் பாரதி நூற் ருண்டு விழாக் கொண்டாட் டங்களின் சிறந்த அறுவடை, ஒரேயொரு அறுவடை- ''பாரதி;பன்முகப் பார்வை கள்'' புதுமைப் பித்தன் கூறி யது போல எனது அளவு கோலை இதனருகே வைத்து அளந்து சில சிந்தனைகளைக் கூறியுள்ளேன். இந்த நூல் சிந்தனையைத் தூண்டும் வகை யில் அமைந்தது என்பதே இதன் சிறப்பு. ஆய்வாளர்கள் அனைவரும் மிகவும் உழைத்து கட்டுரைகளை உருவாக்கியுள் ளனர். கட்டுரைகள் அனைத் தும் உயர்ந்த தரத்தினவாக உள்ளன. 'பாரதி நூற்ருண்டு விழாவுக்கு ஈழம் ஒன்றே செய் தது; அதையும் நன்றே செய் தது' என்ற பெருமையைத் தேடித் தந்த தேசிய கலை இலக்கியப் பேரவை தொடர்ந் தும் பணியாற்ற அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் பேரவை மேலும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவதாக.

## சிறுகதை...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனந்தமடைந்து கொண்டு இருந்தான் அவள் கணவன்.

நானேவெனில் எல்லாம் தெரிந்தும் ஒன்றும் தோன்ரு மல் என் நண்பன் இறந்ததைக் குறித்து மனம் புகைந்து கொண்டிருக்கிறேன்.

மணிக்கொடி 1936 மாசி

## ஒலிவர் ருவிஸ்ற்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்திருக்கிருய். அவன் உன் தலைப்பனுரின் சாயலைக்கொண் டிருப்பதைக் கண்டு நீ பெரி தும் ஆச்சரியமடைந்துள்ளாய். அவன் பிறந்த இடத்தைத் தேடிப்போய் அவன் பற்றிய விபரங்களை அழித்துவிட்டாய் நீ. அந்தப் பையனை அறிமுகப் படுத்தக்கூடிய ஒரே ஒரு ஆதாரத்தையும் ஆற்றுக்குள் போட்டுவிட்டாய் என்றுகூறிய முதியவர் ''எட்வார்ட் லீபோர்ட்'' இன்னமும் நீ எனக்கு சவால் விடுகிருயா?'' என்று கேட்டார்.

''இல்லை, இல்லை'' என்ருன் மங்க்ஸ். (தொடரும்)

## மானிப்பாய்

(6ம் பக்கத் தொடர்ச்சி]

பாலகிருஷ்ணன் வெற்றியாளர் பெயரை அவர் களது சாதனை சகிதம் அறி விக்க, மாணவர் தமது இல் லக் கொடியுடன் வந்து அதிப ரிடம் தமக்குரிய பரிசில்களைப் பெற்றுச் சென்றனர். இம் முறை பத்துப் புதிய சாதனை கள் நிலை நாட்டப் பட்டமை குறிப்பிடத் தக்கது. சாதனை யாளரை அவர்களது சகாக் கள் கரகோஷம் செய்து பாராட்டிய கட்டத்திலே பழைய ஜூலை நான்கை நாம் முழுமையாகக் காணக் கூடியதாக இருந்தது. இறுதி யாகத் தலைமை மாணவர் தலைவர், செல்வன் ப.சிவரஞ் சன் எல்லோருக்கும் நன்றி கூறினர்.

''சுதுமலையூர் சிவா''

## கண்டராதித்தரும்

(8-ம் பக்கத் தொடர்சி)

இவ்வாறு பாடியருளிய பரம பக்தர், முன்னர் தம் தந்தை யார் தில்லையில் பொன் வேய்ந்த திருப்பணியைத் தாம் கண்காணித்தபோது, கண்ணு ரக்கண்டு களித்த பெருமையை யும் குறிப்பிடுவார்.

''வெங்கோல் வேந்தன்
தென்னன் நாடும்
ஈழமுங் கொண்ட திறற்
செங்கோற் சோழன் கோழி
வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார்
பாடியாடும்
அணிதில்லை யம்பலத்துள்
எங்கோன் ஈசன்
எம்மிறையை
என்று கொல் எய்துவதே.''

சோழநாட்டு உறையூர் கோழி யூர் என்றும் வழங்கியது. முன்னர் ஒரு கோழி ஒரு யானை யைத் துரத்திச் சென்றதைக் கண்ட சோழன் ஒருவன் அந்த இடம் வீரம் பொருந்தியதெ னக் கண்டு அங்கே தன்நகரை அமைத்தான் என்பது வரலாறு.

ஈழம் என்பது இலங்கைக்கு மறு பெயராயினும் சிறப்பாக வடபாகமே ஈழம் என ஒரு காலத்தில் வழங்கிவந்தது. சோழர் கல்வெட்டுக்களில் தென்னிலங்கை சிங்கள நாடு என வழங்கி வந்ததாகவும் செய்திகள் உண்டு. முதலில் வடபாகத்தைச் சோழர் பிடித் தமையை ஈழம் கொண்டவர் எனக் குறிப்பிட்டவர்கள், பின் னர் தென்னிலங்கையைப் பிடித்தமையை, சிங்கள நாடு பொடிப்படுத்தியவர் என்றும், முரட்டொழிற் சிங்களவர் என்றும் குறிப்பிடுவர். சிவ ஞானப் பெரியவராய கண்ட ராதித்தர் நான்காண்டுகள் அரசாண்ட பின் 957ஆம் ஆண் டில் மறைந்தார் என்ரே, துஞ் சினுர் என்ரே, இறந்தார் என்ரே கூற மனம் கொள்ளா தவர்கள், அவரை ''மேற்கெ ழுந்தருளின தேவர்'' எனக் குறிப்பிடுவர்.

கண்டராதித்தர் சேரநாட் டுக்கூடாக நண்பர்கள் சிலரு டன் சென்று கப்பலேறி அரே பியா சென்று மெக்கா எனவும் வழங்கும் மக்கா நகரில் ''மக்கீச்சுரம்'' என்னும் சிவா லயம் அமைத்துப் பூசித்து வாழ்ந்தார் என்று ஒரு கதை நிலவியது. (வளரும்)

# போரும் போர்வீரரும்

''சமாதானத்தைக் காப்பதற்குள்ள சரியான வழி போருக்கு ஆயத்தமாக இருப்பதுதான்''.
- ஜோர்ச் உவாஷிங்ரன்

''முப்பது ஆண்டுகள் பேச்சுவார்த்தையினுல் தீர்க்க முடியாத பிரச்சனையை மூன்று மணித்தியாலப் போரினுல் தீர்க்கமுடியும்''
- ஹிட்லர்

''என் மனைவி மக்களும் வேலையாட்களும் என் வீட் டில் பலவந்தமாக வந்து தங்கியிருக்கும் போர்வீரர் களாயிருக்கிருர்கள்''.
- லியோ டால்ஸ்டாய்

''எந்த வகையில் பார்த்தாலும் நெப்போலியனைப் போன்ற கீர்த்திமிக்க போர்வீரன் இதுவரை உலகில் தோன்றவேயில்லை''.- அட்மிரல் மௌன்ட் பேட்டன் பிரபு

''விடுதலைப் போராளிகளே! மெல்லிசையையும் மென் முழவினையும் தவிருங்கள், கடினமான பறைகளை முழக் குங்கள், 'கன' ராகங்களைப் பாடுங்கள்''.
- சுவாமி விவேகானந்தர்

''கலைகளில் அதிக ஈடுபாடுள்ள மக்கள், மெல்ல மெல்லத் தமது போராடும் திறனை இழந்து விடுகிருர்கள். உதாரணம்:- இன்றுள்ள இத்தாலிய மக்கள்''.
- வண. தனிநாயகம் அடிகளார்

''சங்க காலத்தில் தமிழ்ப் போராளிகளுக்குச் 'சான் ருேர்' என்னும் ஒரு பெயர் வழக்கிலிருந்திருக்கிறது இஃது எத்துணை நனிநாகரிகர்களாய் அன்று நம் முன்னேர் வாழ்ந்திருக்கிருர்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டு''.
- வண. கலாநிதி தாவீது அடிகளார்

''போர்வீரனுக்கும் புலிக்கும் வித்தியாசம் வெறும் உருவம் மாத்திரமே''.
- அறிஞர் அண்ணு

''அதர்மத்தை அழிக்கப் போராட வேண்டியது நீதி மானின் கடமை''.
- பகவத்கீதை

''உலகில் உள்ள எல்லாத் தாய்மார்களையும்விட நான் தான் பெரிய பாக்கியசாலி. ஏனெனில் மிகச் சிறந்த போர்வீரஞன மார்ஷல் ரோமரியைப் பெற்ற வயிறு என் னுடையது''. - 2-ம் உலக மகா யுத்த காலத்தில் பீல்ட் மார்ஷல் மான் ரோமரியின் தாயார் கூறியது.

தொகுத்தவர்: செல்வி: ஆ. செந்தாமரை,
அல்லைப்பிட்டி - 1.

## வாழ்வுடன்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கல்குலேட்டர் எமது உடல் உஷ்ணத்தைக் கிரகித்துக் கொண்டு தேவையான கணக்கு விபரங்களை நொடிப் பொழுதில் பிழையின்றித்தரு கிறது. ஐம்பது அமெரிக்க டொலர் முதல் தொண் ணூறு அமெரிக்க டொலர் கள் வரை கொடுத்து இந்தக் கைக்கடிகாரங்களை வாங்க முடியும்.

### 12 விதமான தகவல் தரும் கல்குலேட்டர்

வீட்டிலுள்ள தனிப்பட்ட கம்பியூட்டர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடிய மற்ெருரு அதிசய கைக் கடிகாரத்தை இன்னுமொரு ஜப்பானிய நிறுவனம் கண்டு பிடித்திருக்கிறது. அந்தக்கம்பி யூட்டரில் சேகரித்து வைக்கப் பட்டிருக்கும் தகவல்களை இந் தக் கைக்கடிகாரம் பெற்றுக் கொள்ளும் சக்தி படைத்திருக் கிறது. தொலைபேசி இலக்கங் கள் மற்றும் முக்கிய பிரமுகர் களைச் சந்திப்பதற்காக ஏற் படுத்தப்பட்ட காலநேரங்கள் போன்றவற்றை இந்தக் கைக் கடிகாரம் துல்லியமாகக்காட் டும். அத்துடன் விமானங்கள் புறப்படும் நேரங்கள் அவை வந்து சேரும் நேரங்கள் போன்ற பயனுள்ள தகவல் களையும் இந்தக் கடிகாரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடி யும். மொத்தம் பன்னிரண்டு விதமான தகவல்களை இந்தக் கடிகாரம் தரவல்லது. இரு நூறு அமெரிக்க டொலர் கள் கொடுத்து இந்தக் கடி காரத்தைவிலைக்குவாங்கலாம்.

### எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கடிகாரம்

இவை யெல்லாவற்றையும் மிஞ்சும் விதத்தில் மற்ெருரு அதிசயக் கைக்கடிகாரத்தை இன்னுமொரு ஜப்பானிய நிறு வனம் கண்டுபிடித்திருக்கிறது. ஒருவரின் அன்றாட கால பலா பலன்கள், சுகாதார நிலை, செல்வநிலை மற்றும் அவரு டைய மனதில் தோன்றும் கற்பனைகள் ஆகியவற்றை இந்தக் கைக்கடிகாரம் தரக் கூடிய சக்தி பெற்றிருக்கிறது. சூரிய சந்திர நிலைகளை அடிப் படையாக வைத்து இந்தக் கடிகாரம் இயங்கி வருகிறது.

### மீனவருக்கு

இந்தக் கடிகாரம் அதிகமாக மாலுமிகளுக்கும் மீனவர் களுக்கும் பயன்படக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. கடல் அலைகளின் தன்மைகளை முன்கூட்டியே எடுத்துக்காட் டிப் பாதுகாப்பான கடல் பிர யாணத்துக்குக்கடல்சுவாத்திய நிலை ஏற்றதாக உள்ளதா இல்லையா என்பதை இந்தக் கடிகாரம் எடுத்துக்காட்டும். எழுபது அமெரிக்க டொலர் கள் கொடுத்து இந்தக் கடி காரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## வேண்டுகோள்

கடந்த 5-7-85 வெள்ளிக்கிழமை அன்று புளியங்குளத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட 26 சிறீ 2263 இலக்க லொறி பற்றிய விபரம் எதுவும் தெரியவில்லை. இதனைக் கடத்தியவர்கள் தயை கூர்ந்து லொறியையும், பொருட்களையும் தொழிலாளர்களுடன் திருப்பி ஒப்படைக்கும் வண்ணம் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்,

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்,
113 1/1, கண்டி வீதி, கிளிநொச்சி.

4575



## மன்னிப்புக் கோருகின்றோம்

சிற்றிமெடிக்கல்ஸ் உரிமையாளர் L V. சிங்கராஜா அவர்களை கடத்தியது தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது (T E L O) தவறுதலாக குற்றம் சுமத்தியதற்காக T. E. L. O. இயக்கத்திடமும் பொதுமக்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றோம்.

தவறான வழி நடத்தல் காரணமாக இவ்வாறு குற்றம் சாட்ட நடந்ததையிட்டு மிகவும் மனம் வருந்துகிறோம்.

இப்படிக்கு
ஊழியர்கள்
சிற்றிமெடிக்கல்ஸ்
யாழ்ப்பாணம்.

20-07-1985 4588



## தேவை

### (1) Power Loom Technician

ஜப்பான் (Japan) மின்தறியில் குறைந்தது நான்கு வருடம் அனுபவமுள்ள தகுதியானவருக்கு 1,500/- — 2,000/- உட்பட்ட சம்பளம் வழங்கப்படும்.

### (2) மின்தறி நெசவாளர் (Weaver)

தரமான புடவை உற்பத்தி செய்யக்கூடிய குறைந்தது நான்கு வருடம் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
அனுபவம், தகுதி அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.
(ரூபா 25 தொடக்கம் ரூபா 35 வரை)
வயது: 22 தொடக்கம் 30ற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

### (3) Warper / Supervisor

வார்ப்பிங் மெசின் ஓட்டக் கூடியவரும், மின்தறி மேற்பார்வையாளராக [Supervisor] கடமையாற்றக்கூடிய பெண் ஊழியர் விரும்பப்படுவர்.

குறிப்பு:
தங்குமிட உணவு வசதிகட்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்
நேர்முகப் பரீட்சைக்கு 27-7 85 — 28 7-85 காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

SRIRAMS WEAVING (PVT) LTD.,
KONDAVIL ROAD,
IRUPALAI — KOPAY.

(4550)


## வெய்யிலில் வாடும் மீன் வியாபாரிகள்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் மீன்சந்தை வியாபாரிகளும், அங்குவரும் வாடிக்கையாளரும் வெய்யிலில் காய்கின்றனர். மீன்கள் மிக விரைவில் பழுதடைகின்றன.

யாழ்ப்பாணம் கோட்டைப் பின்பக்கமாக நிரந்தரமாக இருந்து வந்த மீன் சந்தை நாட்டின் நிலைமை காரணமாக யாழ் கொட்டடிப் பகுதிக்கு மாற்றப்பட்டது.

ஆனால் தற்சமயம் மீன் சந்தைக்கு தற்காலிக கொட்டில்கள் தானும் இல்லாதபடியால் மீன் வியாபாரிகள், ஏனைய இறைச்சி விற்பனையாளர்கள் யாவரும் வெயிலில் காயவேண்டியுள்ளன? மீன்களும் இதனால் பழுதடைகின்றன. எனவே உரியவர்கள் தற்காலிக ஏற்பாடு ஏதாவது செய்து தரும்படி மீன்வியாபாரிகள் சார்பில் திரு. டரிசலின் மரியதாஸ் என்ற நாவாந்துறை மீன் வியாபாரி வேண்டுகோள் விடுக்கின்றார்

## நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வதிரி - பூவற்கரை அருள்மிகு விநாயகர் கோவிலில் வருடாந்த உர்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து இம்மாதம் 31-ம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

அடுத்த மாதம் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை கோவிலில் வருடாந்தப் பொங்கல் வைபவம் நடைபெறும். (வி)

## தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை இளையதம்பி வத்தியாலய தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு வைபவம் 24-ம் திகதி புதன் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவிருக்கின்றது

பிரதம விருந்தினராக யாழ். கல்வி அதிகாரி கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக சமூகசேவை உதவிப் பணிப்பாளர் திருமதி க சிவசிதம்பரம், நல்லூர் கல்வி அதிகாரி சு சிவநாயகமூர்த்தி சிவதர்ம வள்ளல் க கனகராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி பார்வதி கந்தசாமி பரிசில்கள் வழங்கிவார். இவ்விழாவிற்கு அதிபர் கா. கணேசதாசன் தலைமைதாங்குவா மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## குடிநீர்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்

யாழ் அபிவிருத்தி சபையால் முன்னர் குழாய் நீர் வழங்கப்பட்டு வந்த பொழுதிலும் நீர் இறைக்கும் இயந்திரம் பழுது காரணமாக குழாய் நீரும நீர் விநியோகமும் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக சேவையற்று இருக்கிறது

கடும் வறட்சிக் காலங்களில் முன்னர் சமூக சேவைகள் இலாகா குடிநீர் வழங்கி வந்த போதும், இம் முறை இது வரையில் அவ்வாறான ஏற்பாடுகள் ஒன்றும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லை மாவட்டத்திற்கு தனியாகக் கல்விப் பணிப்பாளர் வேண்டும்

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தனியாக கல்விப்பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகசபை கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர் நலன்களைப் பேணவும் இது அவசியம் என மேற்படி சபை தாய்ச் சங்கத்திற்கு அறிவித்துள்ளது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் ஒரு கல்விப்பணிப்பாளரே கடமையாற்றுகின்றார் முல்லைமாவட்டத்திற்கான இவரது கடமை நாள்: திங்கள், செய்வாய், புதன் ஆகும் இதில் திங்கள் மட்டுமே ஆசிரியாகள் கல்விப்பணிப்பாளரைச் சந்திக்கும் நாளாகும் திங்கட்கிழமை கல்விப்பணிப்பாளர் போக்கு வரத்துக் கஷ்டம் காரணமாக பிந்தி வருவதாலும் சில திங்கட்கிழமைகளில் வராது விடுவதாலும் சில திங்கட்கிழமைகளில் கொழும்பில் கருத்தரங்கு நடைபெறுவதாலும், ஆசிரியர்கள் அவரைச் சந்திக்கமுடியாது ஏமாற்றமடைந்து செல்கின்றனர். இதனால் அவர்களுக்கு வீண் செலவும் கஷ்டமும் ஏற்படுகின்றது. கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கவரும் பெற்றோர்கள் பலமுறை ஏமாற்றமடைந்து சென்றிருக்கின்றார்கள். சாதாரண சிறு விடயங்கள் கூட கல்விப்பணிப்பாளர் வந்த பின்தான் தீர்க்க முடியும் என்ற நிலை முல்லை. கல்விப்பணிமனையில் உள்ளது. இந் நிலையில் எமது மாவட்டத்திற்கென 5 நாள் வேலை செய்யும் நிரந்தரக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தேவை என்பது கண்கூடு. எனமேற்படி நிர்வாகசபை அரசாங்கத்திற் சுட்டிக் காட்டியுள்ளது.


## பல்கலைக்கழக ஒத்துமாறல்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 84/85ம் கல்வியாண்டில் பயில அனுமதி கிடைத்துள்ள ஓர் மாணவர், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இதே கல்வியாண்டில் பயில அனுமதி கிடைத்துள்ள வேறோர் மாணவருடன் ஒத்துமாற விரும்புகிறார் விரும்பியவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்

விளம்பர இல: 4576, C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

4576



## அரிய சந்தர்ப்பம்

புதிய பதிவாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் உள்ளூரிலும் வெளியூரிலும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏற்றவாறு

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைய

பின்வரும் பாடநெறிகளுக்கான பகுதிநேரப் பயிற்சியும், போதனையும் 2-8-1985 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

- ★ கட்டிடப் படம் வரைதல் (Draftsmanship) — 6 மாத காலப் பயிற்சி [ஆங்கிலமூலம்]
- ★ கடைச்சல் யந்திர இயக்குனர் (Lathe Operator) — 3 மாத காலப் பயிற்சி
- ★ எலெக்ரிக் வெல்டிங் (Welding Arc) — 3 மாத காலப் பயிற்சி
- ★ வீட்டு மின் இணைப்பு (Electrical House Wiring) — 3 மாத காலப் பயிற்சி
- ★ City and Guilds Examination 1986.
- ★ Electrical Engineering Technicians Part I and II.

மேற்கண்ட பாடநெறிகளுக்கு அதிகளவு செய்முறை அறிமுறை பயிற்சி கொடுக்கப்பட இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்க!

பதிவாளர்
Patrician Institute Of Higher Studies
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# குருக்கள் தேவை

பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்திற்கு நித்திய பூசைக்கு, கொடியேற்றும் தகைமையுடைய குருக்கள் குடும்பத்துடன் தேவை. சகல வசதிகளுடன் கூடிய இருப்பிட வசதி கொடுக்கப்படும். உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
அ புவேந்திரலிங்கம்,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

4552

---

நீண்ட, அடர்த்தியான, கருமையான
கூந்தலின் இரகசியம்:-

WHITEFIELD'S
## 'Super King' Coconut Hair Oil

(செவ்விளநீர் எண்ணெய்)

இன்று எல்லோரும் விரும்பி வாங்குவது இதுவே.

மொத்தமாக விற்கும் நிலையங்கள்:—

★ என். எம். எஸ்.—நவீனசந்தை
★ அம்பிகாபதி (F)பான்ஸிஹவுஸ், பெரியகடை
★ லக்ஷ்மிநாதன்—தெல்லிப்பழை
★ ஸ்ரீ கோணேஸ்வரி (F)பான்ஸி பலஸ் மின்சாரநிலைய வீதி.

## WHITEFIELD INDUSTRIES

DE VOS AVENUE, COLOMBO- 4. VALLAI ROAD, CHANKANAI

---

# ஓராண்டு நினைவஞ்சலி

## தோழர் து. பஞ்சலிங்கம்

(மனேஜ் மானேஜர்)



மலர்வு:
09- 04- 1956

உதிர்வு:
22- 07- 1984

தோழா,
தமிழின விடுதலைக்காக நீ நடந்த தூரங்கள்......
வறுமையின் மடியில் தவழ்ந்த அந்த நாட்கள்......
கண் விழித்த இரவுகள்.....

பல்கலைக் கழக அனுமதியை உதறி எறிந்தாய்; இயக்கங்களின் ஒற்றுமைக்காக தமிழக முதல்வர் கூட்டிய மகாநாட்டில் கலந்துகொண்டாய் இப்படிப்பட்ட உயர்மட்டப் பங்களிப்புகளை ஆற்றிய உனக்குக் கிடைத்த பரிசு உரிமை கோரப்படாத படுகொலையா?

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

4574

---

## இன்று

(கரவெட்டி)

சென்.ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவின் கரவெட்டிப் பகுதி அங்கத்தவர்களுக்கான விஷேட கூட்டம் எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி திரு.இருதயக் கல்லூரியில் நடைபெறும்.

இப் படைப் பிரிவின் பகுதி அத்தியட்சகர் திரு என். போஜன் இதில் சிறப்புரை வழங்குவார்.

## பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம் பெறும்.

அதிபர் திரு.மு திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் இக் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## புதிய நிர்வாகிகள்

(சாவகச்சேரி)

கைதடி நுணாவில் கிராம அபிவிருத்திசங்கத்தின் 38வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபொழுது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர், தலைவர் த, கனகலிங்கம், உபதலைவர்கள் செ. தியாகராசா, நா.அருள்சோதி ஆ அருணாசலம் செயலாளர் சீ, சிவசுப்பிரமணியம் உப செயலாளர் பொ. வடிவேல் பொருளாளர் வே. தியாகராசா மற்றும் 5பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## சங்கீத நடனப் போட்டி முடிவுகள்

(ஊரெழு)

ஊரெழு கலைவாணி சன சமூக நிலையத்தினர் தங்கள் ஆண்டு விழாவையொட்டி நடாத்திவரும் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று ஊரெழுகணேச வித்திய சாலை மண்டபத்தில் நடனம், சங்கீதம், தனிநடிப்பு ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

பின்வருவோர் வெற்றி பெற்றனர் நடனம்: செல்விகள். த. மாளவி ா, கி. சோழமாதேவி, செல்வன் பூ. தாஸ்நிதி

சங்கீதம் செல்விகள் ந. அனுஷா, அ. தனுஷா, இ. சித்திரா, க. லோசனு செல்வன் செ. மோகனதாஸ்.

தனிநடிப்பு செல்விகள்: க லோசனு. சி. சுஜாத்தா, கி. சந்திரிகா, செல்வன். பூ தாஸ்நிதி செல்வன் செ குகராஜா.

---

உ
விராட் விஸ்வப் பிரம்மனேநம

# விஸ்வகீதா ஆபரணத் தொழிற்சாலை

ஓடர் நகைகள் செய்து கொடுக்கப்படும்.

மீண்டும் வட்டு மக்கள் நலன்கருதி மங்களகரமான தேவைகளுக்கும்

## விஸ்வகீதா ஆபரணத் தொழிற்சாலை

(பத்மவாசம்) மூளாய் ரோட், வட்டுக்கோட்டை.

உரிமையாளர்: சுப்பையா பாலகிருஷ்ணன்

4511

---

பண்டத்தரிப்புப் பரிஷ் பல. நோ. கூ. சங்கம்

# கேள்விப்பத்திர விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான மேற்படி சங்க மின்தறி ஆலைக்குக் கிழக்குப் புறமாகவுள்ள, பண்டத்தரிப்பு பட்டினசபை எல்லைக்குட்பட்ட

## 2 பரப்புக் காணி

விற்பனை செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் யாவும் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் மீளப்பெறப்படும் பணமாக ரூபா 100/-ம், மீளப் பெறப்படாத பணமாக ரூபா 25/-ம் செலுத்தியவர்களுக்கு மட்டுமே விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ கூ. சங்கம்" என விலாசமிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "காணிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் விண்ணப்பப் படிவங்கள் 02-08 85 காலை 10-00 மணி வரை விநியோகிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 03-08-85 சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து உடைக்கப்படும். அந்நேரத்தில் கேள்விகள் விண்ணப்பித்தவர்களும் சமுகம் கொடுக்கலாம். கிடைக்கப்பெறும் கேள்விகளை முற்றாகவோ அன்றேல் தனித்தனியாகவோ நிராகரிக்கும் உரிமை குறிப்பிட்ட சங்கத்திற்கு உண்டு.

பொதுமுகாமையாளர்.

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.


4535

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் கதிரவேற்பிள்ளை நாராயணசாமி

மகிழமரத்தடி
வல்வெட்டித்துறை



மலர்வு:
27-9-1918

உதிர்வு:
21-6-1985

என்றும் எங்கள் நினைவில் குடியிருக்கும் குலவிளக்கே; நின்னை ஆயுள் உள்ளவரை நினைவில் வைத்திருப்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் பங்குபற்றியும், எமது துன்பங்களில் பகிர்ந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெரியமலை, தொண்டமனாறு,
வல்வெட்டித்துறை.

4546

---

# விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L

Day Classes — 2-வது பிரிவு ஆரம்பம்: 22 - 7 - 85 [காலை 8-30]

Evening Classes — 3-வது பிரிவு ஆரம்பம்: 22 - 7 - 85 [பி. ப. 2-30]

குறிப்பு: விசேட சித்தியுடன் O/L சித்தியடைய எமது நிறுவனம் நிச்சயம் கைகொடுக்கும். கடந்தகால பரீட்சை முடிவுகள் இதற்குச்சான்றாகும்.

4529

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




**கஜேன்**
**மினி சினிமா**
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30, 4-30, 7-00
**Beach Girls**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**உஷா மினி**
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30 4-30, 6-30
**HELL CATS**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே. முந்துங்கள், தவறவிடாதீர்கள்.

**சோபிகா மினி**
(பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-15
பாலாஜியின் வெற்றிப் படைப்பு
மோகன் - சரிதா
**அண்ணி**

**பாலகன்**
**வீடியோ விஷன்**
சாந்தி சினிமா முன்பாக
தினசரி 10-30, 2-30, 4-30, 6-30, 9-30
Richard Roundtree in
**Shaft in Africa**
(Adults only)
கறுப்பு இனத்தை சேர்ந்த ஒருவன் தனது இனத்தை காப்பாற்ற எடுக்கும் முயற்சியும் அவனை காதல் வலையில் சிக்கவைப்பதற்கு கன்னியர் படும் பாட்டையும் கண்டுகளிக்க இன்றே பாருங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்**
10-30, 2-15, 4-30, 6-45, 9-00
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
**Shaolin Temple**
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

**லிடோ சினிமா**
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரவின்
**நீங்கள் கேட்டவை**
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

**மொடேர்ண்**
**மினி சினிமா**
5 X 5 திரையில்
தினசரி 3 காட்சிகள்
**இளமை**
ஆனந்தபாபு-ஜீவிதா
அர்ஜுன்-அனிதா
புதிய வெளியீடு

**குமரன்**
**மினி சினிமா**
(67, ஸ்ரான்லி வீதி)
(புதிய வெளியீடு)
10-30, 2-30, 4-30, 6-00
மோகன் - சரிதா
**அண்ணி**

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m
LEE MARVIN
**THE BIG RED ONE**
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**நியூ சாந்தி மினி**
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி ஸ்ரீரஞ்னி
"பராசக்தி"
இன்று மட்டும்

**ஹரன்**
வெண்திரையில்
10-30, 2 30, 4-30, 6-15
Mark Burns Shaun Curay
**Death is a Woman**
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்

**Windsor**
வெண்திரையில்
Daily 10-30. 2-00, 4-30, 7-00
**Blue Lagoon**
வாலிபன் யுவதியின் காதல் ஓவியம். கன்னிப் பெண்ணின் காதல் சாகசங்களைக் காணத் தவறாதீர்கள்
வயது வந்தவர்கட்கு மட்டும்.

**மேபெயர் மினி**
(கன்னாதிட்டி)
10-30 a. m.
**Guns of Navarone**
War Film
மாலை 2-30 6 0
பிரதாப், கமலதா நடித்த
**சொல்லாதே யாரும் கேட்டால்**
திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த படம்.


## நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதப்பட்ட இப் பிரசுரத்தில் "ஏப்ரல் 21 ம் திகதி வீசு வழியே பயணம் செய்தபோது அரச படையினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட திடீர் மோதலில் வீரமரணமடைந்தாய் தோழா" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுவரொட்டிகள்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (ஈ.பி.ஆர் எல் எவ் யைச் சேர்ந்த இரவீந்திரகுமார் (ராஜன்) என்பவரின் 31-ம் நாள் நினைவஞ்சலிச் சுவரொட்டி யாழ் நகரெங்குப் பெரியளவில் ஒட்டப்பட்டுள்ளது.

"சர்வதேச பயிற்சி முகாம் ஒன்றில் பயிற்சி பெற்ற ராஜன் 7-06-85 ல் வீரமரணமடைந்தமைக்காக அஞ்சலியைச் செலுத்துகிறோம்" என்று அச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**லதா மினி**
(கோண்டாவில்)
ரஜனிகாந்த், ராதிகா
கார்த்திக், துளசி
**நல்லவனுக்கு நல்லவன்**
10-30, 3 30, 6-45

**தேவி மினி சினிமா**
(கைலாசர் அருகாமை)
21-7-85 மட்டும்
10-30. 2-30 6-30,
எம் ஜி.ஆர். சரோஜா
வீரப்பா நடிக்கும்
**ஜெனோவா**
(புதிய பிரதி)

**சரவணபவன்**
**மினி சினிமா**
(பெருமாள் கோவில்/ வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30, 7-00 மணி
**HELL CATS**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
10-30 12-30 2-30
4-30 6 30
**Escort Girls**
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**லிபேர்ட்டி மினி**
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30 2-30 4-45, 7-00 8-45
**THE FIRST TURN ON**
(Adults Only)
ஒவ்வொரு காட்சியின் முன்பும் இனிமையான இசைப் பாடல்களைப் கேட்டு மகிழுங்கள்.


# வானை ஒப்படைக்காவிடில் உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்ட கிளிநொச்சி வண. பிதா மதுரநாயகம் அடிகளின் ஹைஹேய்ஸ் வானை மீண்டும் ஒப்படைக்காவிட்டால் உருத்திரபுரம் ஜெயந்திநகர் மக்கள் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வண. பிதா மதுரநாயகம் அடிகள், கடந்த சிலமாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது. அவரது வான் சிலரால் எடுத்துச் செல்லப்பட்டது தெரிந்ததே.

வண. பிதா, கிளிநொச்சி 8-ம் வாய்க்கால் லேங்ஸ்சாபனம், ஆரோபணம் அநாதை மாணவர் விடுதி ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வருகிறார் [மா]

## வன்முறை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இன்னும் சில ஆண்டுகளில் புதிய இலங்கை ஒன்று உருவாகும் என்றும் அங்கு தெரிவித்த ஜனாதிபதி, உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் திருகோணமலையில் சர்வதேச விமான நிலையம்ஒன்றும் நிலக்கரியில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையொன்றும் அமைக்கப்படும் என்றும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஏனைய செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வன்னிப் பகுதி அபிவிருத்தியடையும் என்றும், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளே அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்றும் தெரிவித்தார். (து)

## இலங்கை. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாணயக் கடத்தல் முயற்சி தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரிகளே இத்தங்கக் கடத்தல் பற்றிக் கண்டுபிடித்துள்ளதாக அது தெரிவிக்கிறது.

கொழும்பிற்கும், சிங்கப்பூருக்கும், டுபாய்க்குமிடையில் இக்கடத்தல் இடம்பெறுவதாகவும் இத்தங்கம் இந்தியாவில் விற்பனை செய்யப்படுவதாகவும் இத்தகைய கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட 58 இலங்கையர்கள் திருவனந்தபுரத்தில் கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும், இக்கடத்தல் மூலம் பெறப்படும் பணம் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு வழங்கப்படுகின்றது என்றும் 'லங்கா புவத்' தெரிவிக்கிறது (து

## மீண்டும்...

[16ம் பக்கத் தொடர்ச்சி]

"தொடர்ச்சியாகக் குண்டுகளை வெடிக்க வைத்துக் கொழும்பு நகரைக் கலக்க வைப்பதே ஈரோஸின் நோக்கமாக இருந்தது அது தோல்வியில் முடிவுற்றது" என்றும் 'லங்காபுவத்' தெரிவித்துள்ளது.

## நியாயமான...

1-ம் பக்கத்தொடர்ச்சி)

பெற்ற பேச்சுவார்த்தையில் இலங்கைத் தமிழர்களால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட பழைய யோசனையே இலங்கை அரசுப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது என்றும், அரசியல் காரணங்களுக்காகக் காவலில் வைக்கப்பட்டுள்ள 643 பேரில் சிலரை விடுதலை செய்வதாக இம்மாநாட்டில் இலங்கை அரசுப் பிரதிநிதிகள் கூறிய போதிலும் இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இம்மாதிரி உறுதிமொழி மீறப்பட்டுள்ளமை இலங்கை அரசின் போக்கில்சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [து]

## புங்குடுதீவில் வீதி திருத்தம் துரிதம்

[புங்குடுதீவு]

புங்குடுதீவில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான வீதி திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் வீதி திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

புங்குடுதீவு வீதி திருத்த வேலைகள் தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு சேகபடிகலிங்கத்தின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.

## சங்காபிஷேகம்

(வேலணை

வேலணைபெருங்குளம் முத்துமாரி அம்பாளுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

## சைக்கிள்களை இழந்தவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் பலர்-தங்கள் சைக்கிள்கள் மீண்டும் கிடைக்காதா என அங்கலாய்க்கிறார்கள்.

யாழ். நகரில் அண்மைக் காலங்களில் பரவலாக இடம் பெற்ற சைக்கிள் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகத் தீவிரதேடுதல் வேட்டையில் இறங்கிய தம்பிப்பிள்ளைமகேஸ்வரன் தலைமையிலான தமிழ் ஈழ இராணுவ இயக்கத்தினர் இரு சமூக விரோதிகளைக் கைது செய்ததுடன் அவர்களிடம் இருந்து ஏழு சைக்கிள்களையும் கைபற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மேற்குறிப்பிட்ட இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்ட ஏழு சைக்கிள்களுக்குள் தங்களது சைக்கிள்களும் இருக்கலாம் எனப்பலர் சந்தேகிக்கின்றனர்

தமிழ்ஈழ இராணுவ இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்ட சைக்கிள்களை எப்படி அடையாளம் காட்டிப்பெறுவது என்பது தெரியாதிருப்பதாக சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (மா)

ஈழநாடு

வாரமலர் – Eelanadu Varamalar

# நடுச்சமுத்திரத்தில் 'குமுதினி' கடற்படையினரால் சோதனை

## அனுபவத்தைக் கூறுகிறார் ஒரு பிரயாணி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்குமிடையில் சேவையில் ஈடுபடும் படகுகளை நடுக்கடலில் வைத்து சோதனையிடுவதால் பிரயாணிகள் பெரிதும் பீதிக்குள்ளாகி வருகிறார்கள் எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் நெடுந்தீவுக்கடலில் பல உயிர்களைப் பலிகொண்ட தாக்குதலுக்குள்ளான 'குமுதினி' என்ற படகு கடந்த 17ம் திகதி காலை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு வருகையில் நடுக்கடலில் வைத்து கடற்படையின் சோதனைக்குட்படுத்தப்பட்டதாம்.

ஏற்கனவே இப்படகு நடுக்கடலில் வைத்துத் தாக்குதலுக்குள்ளாகியிருப்பதால் அன்றைய தினம் நடுக்கடலில் கடற்படைப்படகைக் கண்டதும் பிரயாணிகள் பெரும் பீதிக்குள்ளாகித்தவித்துள்ளார்கள்.

அன்றையதினம் அப்படகில் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு பிரயாணம் செய்தவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிலஅளவையாளர் பி. எஸ் ஐயர் பின்வருமாறு எழுதுகிறார்.

படகு வேகமாகக் கடலில் போய்க்கொண்டிருந்தது. பயங்கர அலைகள். படகு முன்பக்கம் உயர்வதும், பக்கவாட்டில் சரிவதும் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது. காலை சுமார் 8 மணிக்கு நடுச்சமுத்திரத்தில் 'குமுதினி' வந்து கொண்டிருந்தது. கடற்படை படகு ஒன்று. குமுதினியின் பாதைக்கு நேராக, மிக வேகமாக வந்து கொண்டிருந்தது பயமும் பீதியும் அடைந்த பெண்களும் குழந்தைகளும் "நாகம்மாளே காப்பாத்து" என்று ஓலம் இட்டனர். கடற்படைப் படகு குமுதினியை நிறுத்தும்படி கட்டளையிட்டு நேராக வந்து பக்க வாட்டில நின்றது குமுதினியை அருகில் வரும்படி சமிக்ஞை யிட்டனர் இரண்டு படகுகளும் மேலும் கீழுமாக அலைகளில் தத்தளித்துக் கொண்டிருந்தன. "டமார்" என்ற சத்தம் கேட்டது. இரு படகுகளும் பக்கவாட்டில் மோதிக்கொண்டன குமுதினி மரப்பலகைகளால் செய்யப்பட்டது. கடற்படைப்படகு குமுதினியைவிட உயரமானது. எஃகுத் தகட்டால் செய்யப்பட்டது. குமுதினி பக்கவாட்டில் சரிந்துவிடுமோ என்ற அச்சம் ஜனங்கள் மத்தியில் பெண்கள் குழந்தைகள் வாந்தி எடுக்கத் தொடங்கினர் கர்ப்பிணி ஒருவர் மயங்கிவிட்டார் கடற்படைப் படகில் இருந்து ஒரு சிப்பாய் குமுதினியில் குதித்து பிரயாணிகளின் அடையாள அட்டை பொதிகளை பரிசோதித்தார். இருபது நிமிடம் "டமார்" "டமார்" என்று படகுகள் மோதிக்கொண்டே இருந்தன. அச்சத்தால் ஜனங்கள் கலக்கம் அடைந்தனர். மோதல்கள் அதிகரிக்கவே, பரிசோதனைக்கு மத்தியில் சிப்பாய் தன் படகுக்குத் திரும்பினார். படகு விரைந்துசென்றுவிட்டது. 'குமுதினி' தன் பயணத்தைத் தொடர்ந்து ஒன்பது மணிக்கு நயினாதீவு வீரரை ஜெட்டிக்கு வந்தது அங்கு கடற்படை வீரர்கள் 'குமுதினி'யில் ஏறி அடையாள அட்டை, பொதிகளை மீண்டும் பரிசோதனை செய்தனர். என்னிடம்வந்த சிப்பாயிடம் சிங்களத்தில், "ஏன இந்தத் திடீர் பரிசோதனை? அரைமணிக்கு முன்புதானே சமுத்திர மத்தியில் எங்களை வழிமறித்துச் சோதித்தார்கள்" என்றேன். "வழிமறித்துப் பரிசோதனை நடந்ததா?" என்றார் அந்தச்சிப்பாய் "ஆம்; பயங்கரக் கடலில் இந்தப் பரிசோதனை அவசியம் தானா? நயினாதீவில் அமைதியான இடத்தில் பரிசோதனை செய்தால் போதாதா?" என்றேன். அவர் பதில் பேசாது தன் பரிசோதனையை அத்துடன் நிறுத்திக் கொண்டு படகை விட்டுப் போய் விட்டார். பின்புறத்தில் பரிசோதனை செய்தவரும் பரிசோதனையை முடித்துக் கொண்டு கரை ஏறினர். குமுதினி 9 30 மணிக்குப் புறப்பட்டு குறிகாட்டுவானை அடைந்தது படகில் வந்த சனங்களின் முகங்களைப் பார்க்க முடியவில்லை அச்சத்துடனும் பீதியுடனும் வந்து சேர்ந்தனர். குழந்தைகள் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை.

போர் நிறுத்தம், சமாதானப் பேச்சுக்கு மத்தியில் பொங்கும் கடலில் இந்தப் பரிசோதனை அவசியமா? சற்று நிதானம் தவறியிருந்தால் குமுதினியின் பாதைக்குச் செங்குத்தாக வந்த படகு குமுதினியுடன் மோதி இருக்கும். குமுதினி குடைசாய்ந்திருக்கும். ஓர் விபத்து என்பார்கள். தற்செயலாய் நடந்தது என்று சொல்லிவிடுவார்கள். எத்தனை உயிர் பலியாகி இருக்கும்! எங்கள் சொந்த நாட்டில் ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்துக்குச் செல்ல ஏன் இந்த அபாயகரமான பரிசோதனை? பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு ஜீவன் போகிறது"

---

**மரண அறிவித்தல்**

**திருமதி ஆ. பாக்கியம்**

நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி ஆ. பாக்கியம் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற அம்பிகைபாகர் ஆறுமுகம் ஐயா (நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய ஸ்தாபகரும், பிரதம அர்ச்சகரும், முன்னாள் கோப்பாய்க்கிராமச் சங்கத்தலைவரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செ. இரத்தினசபாபதி ஐயா, காலஞ்சென்ற செ. தர்பலிங்க ஐயா ஆகியோருடைய அன்புத்தமக்கையும், நாகரத்தனம் (மணி) அவர்களுடைய அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (22-7-85) பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் தருபவர்:

து. மகாதேவன்,

(4593) நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,

---

ரெலோ வேண்டுகோள்:

# "25ம் 26ம் திகதிகள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கவும்"

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறைப்படுகொலைகளையும் தொடர்ந்த 83 ஜூலை இனக்கலவரங்களையும் நினைவு கூருமுகமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இம்மாதம் 25ம், 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) வேண்டுகோள் விடுத்துள்ளது.

'அந்த இருண்ட நாட்கள் தொடர்ந்து பேசட்டும்' என்ற தலைப்பில் 'ரெலோ' வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அப்பிரசுரம் மேலும் கூறுவதாவது!

"தேசபிதா தங்கத்துரைக்கும் தளபதி குட்டிமணிக்கும் கொலையுண்ட அனைத்துத் தோழர்களுக்கும், உயிர் துறந்த அப்பாவி மக்களுக்கும் எமது அஞ்சலிகள்". (மா)

---

# கரவெட்டி மேற்கில் கி. மு. சங்க நிலையம் தீக்கிரை!

(கரவெட்டி)

கரவெட்டி மேற்கு உச்சில் கிராம முன்னேற்றச்சங்கம் இயங்கிவந்த நிலையம் இனந்தெரியாத சில நபர்களால் தீ வைக்கப்பட்டதால் முற்றாக எரிந்து சாம்பரானது

மேற்படி நிலையத்தில் அப்பகுதியைச்சேர்ந்த சுமார் 30 சிறுவர்கள் கல்வி பயின்று வருவதாகவும், அந்த நிலையம் தீக்கிரையானதால் அவர்கள் தொடர்ந்து கல்விபயில முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இக்கிராம முன்னேற்றச் சங்கத்துக்குச் சொந்தமான தளபாடங்களும் தீக்கிரையாகியிருக்கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தீவைப்புச் சம்பந்தமாக வடமராட்சி உதவி அரசாங்க அதிபருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமமுன்னேற்றச் சங்கம் இக்கிராமத்தில் பல அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது

இச்சம்பவத்திற்குச் சிலநாட்கள் முன்னர் இக்கிராமத்தில் இயங்கிவந்த சர்வோதயக் கிளை நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதும் தெரிந்ததே. [மா]

---

# மீண்டும் 'லங்காபுவத்' கூறுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவைக் கொலை செய்வதற்கான உத்தரவு சென்னையிலிருந்து பிறப்பிக்கப்பட்டது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளதாக 'லங்காபுவத்' அறிவித்துள்ளது.

[15-ம் பக்கம் பார்க்க]

---

**மரண அறிவித்தல்**

**திரு. வைரமுத்து நமசிவாயம்**

யாழ்ப்பாணம் வைரமுத்து நமசிவாயம் (1-ம் குறுக்குத்தெரு நமசிவாயம் சைக்கிள் கடை உரிமையாளர்) காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 28/1, இராஜேந்திரா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக 21-07-85 ஞாயிற்றுக்கிழமை (இன்று) மாலை 4-00 மணியளவில் புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

(4589) தகவல்: N. குணபாலராஜா

---

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகமணி கனகம்மா**

அத்தியடியைச் சேர்ந்த நாகமணி கனகம்மா காலமாகிவிட்டார் இவர் நாகமணியின் அன்பு மனைவியும் சதாசிவம், நடேசு, சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, சரஸ்வதி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, விஜயரெட்ணம், செல்வரெட்ணம் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம்சென்ற பாலசுப்பிரமணியம், ஞானகுரு. திருஞானசம்பந்தமூர்த்தி, ராஜரெட்ணம் குகனேஸ்வரி, கலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (இன்று 21-7-85 மாலை 4மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கண்ணன்

4592